விலை ரூபா: 20.00


# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

கம் 01 | தாளம் 54 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 18 திங்கட்கிழமை (03.09.2012) | பக்கங்கள்: பதினாறு

## குடியேற்ற பிரதேசங்களில் காத்திருக்கும் வெடிபொருள் அபாயம்



ள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் முடிவிற்கு வந்து மூன்று வருடங்கள் ந்து விட்டன. முள்ளிவாய்க்காலிலிருந்து ஆறு கிலோமீற்றர் அப்பால் ள்ள புதுக்குடியிருப்பில் கடந்த 13ஆம் திகதி மீள்குடியேற்றம் நடை-ற்றது. ஒன்பதாம் வட்டாரத்தில் உள்ள ஜெ.ஜெயக்குமார் என்பவரின் டிலுள்ள பனை மரமொன்றில் ஆர்.வி.ஜி.எறிகணை மேலே படத்தில் டியவாறு ஊடுருத்து நிற்கின்றது. எந்த நேரமும் வெடிக்கக் கூடிய இந்த கணையை அப்புறப்படுத்தி உதவுமாறு கண்ணி வெடியகற்றும் பிரிவின கும், இராணுவத்தினருக்கும் வீட்டு உரிமையாளர் பல தடவைகள் அறி த்திருந்த போதும் இன்றுவரை இந்த எறிகணை அப்புறப்படுத்தப்பட ல்லை. (பட உதவி: ஜெயம் ஜெகன்)

# தமிழர்களுக்கு எதிராக இந்திய அரசாங்கம் செயற்படுகிறது

### தமிழக முதல்வர் ஜெயலலிதா குமுறல்



"இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப் படவேண்டும் என்று தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது மத்திய அரசு எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக் கவில்லை. தமிழக மக்களின் உணர்வுகளை புண் படுத்தும் வகையில், அவ்வப்போது இலங்கை இரா ணுவ வீரர்களுக்கு தமிழ்நாட்டில் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுத்து வருகிறது." இவ்வாறு தமிழக முதல மைச்சர் ஜெயலலிதா நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

தமிழர்களுக்கு எதிரான மத்திய அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கடும் கண்டனத்தை நான் வெளியிட்டவுடன், இலங்கை இராணுவ வீரர் களை இந்தியாவில் உள்ள வேறு மாநிலத்திற்கு அனுப்பி தொழில்நுட்பப் பயிற்சியை மத்திய அரசு தொடர்ந்து அளித்து வருகிறது.

அண்மையில், இரண்டு இலங்கை இராணுவ வீரர்களுக்கு வெலிங்டன் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதை அறிந்தவுடன், அவர்களை உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். ஒட்டுமொத்த தமிழகமும் இதே கோரிக்கையை விடுத்தது.

ஆனால், மத்திய அரசு அதற்கு கிஞ்சித்தும் மதிப்பளிக்கவில்லை. மாறாக, இதுபோன்ற பயிற்சிகள் அளிப்பது நிறுத்தப்பட மாட்டாது என மத்திய அமைச்சர் தெரிவித்து, தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்தியுள்ளார்.

02

## ...தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களை நாடு ...ம்புமாறு மீள்குடியேற்ற அமைச்சர் கோரிக்கை

...ந்தியாவுக்கு அகதிகளாக ...றவர்கள் அவ்வப்போது சிறு ...க்களாக நாடு திரும்பி ...கின்றனர். இதேபோல் மேலும் ...திகள் நாடு திரும்ப விரும் ...ல் அவர்களை எனது அமை ... பாதுகாப்பு அமைச்சுடன் ...ணைந்து வரவேற்கும். அத்து ... அவர்கள் தங்களது பூர்வீக ...தில் மீளக்குடியமர்த்தப்படு ...ள் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்தார். அவர் மேலும் தெரி வித்ததாவது,

இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதியில் தனி ஈழம் கேட்டு புலிகள் அமைப்பினர் ஆயுதம் தாங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே நட ந்த சண்டை காரணமாக ஏராளமான தமிழ் மக்கள்

02

## தமிழர்களை அகதிகளாக்கி இந்திய அரசியலைக் குழப்புகிறதாம் இலங்கை

### முன்னாள் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் துபே

தமிழர்களை அகதிகளாக்கி இந் தியாவின் அரசியலில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் குழப் பத்தை உருவாக்கி வருகிறது என்று இந்திய முன்னாள் வெளி விவகாரச் செயலாளர் மச்குந்த் துபே கூறியுள்ளார்.

சக்மா அகதிகளை பங்களாதேஷ் அனுப்பியது போல் ஈழத் தமிழர் களை இலங்கை அனுப்பி வரு வது வாடிக்கையான ஒன்றாகிவி ட்டது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார். அண்டை நாடுகளால் இந்தியாவுக்கு ஆபத்து என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாறிவரும் உலகில் இந்தியா வின் வெளியுறவுக் கொள்கை என்ற தலைப்பில் விரைவில்

02

## புலிகளின் 13 கப்பல்களை மூழ்கடிக்க இந்தியா உதவியதாம்

"இந்தியாவின் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதியான லெப்டி னன்ட் ஜெனரல் சதீஷ் சந்திரா இலங்கை இராணுவத்தின் ஆலோ சகர் பொறுப்பை ஏற்றார்." இந்தி யக் கடற்படை இலங்கையைச் சுற்றிலும் நிறுத்தப்பட்டு புலிக ளுக்கு ஆயுதம் ஏற்றிவந்த 13 கப்பல்களை மூழ்கடித்தது. இதனால்தான் புலிகளால்

02

## ...ட்டவிரோதமான முறையில் ஆஸி. ...ருபவர்களுக்கு புகலிடம் இல்லை



### அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர்

சட்டவிரோதமான முறையில் ஆஸியில் புகலிடம் கோருபவர்க ளுக்கு இனிமேல் அடைக்கலம் வழங்க தயாரில்லை. சட்ட ரீதி யான முறையில் புகலிடம் கோரு பவர்களுக்கு மாத்திரமே புகலிடம் வழங்கப்படும் என்று அவுஸ்திரே லியக் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித் தார்.

02

## முன்னோடி அமர்வில் இலங்கையின் மனித உரிமை விவகாரம்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் உலகலாவிய பருவ கால மீளாய்வுக் கூட்டத்திற்குச் செல்லும் இலங்கைக் குழுவுக்கு ஐ.நாவின் இலங்கைப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க தலைமை தாங்குவார் எனத் தெரியவருகிறது. இந்தப் பேரவைக் கூட்டத் தொடருக்குச் செல்லும் இலங் கைக் குழுவில் சட்டமாதிபர் திணைக் கள அதிகாரிகளும் பங்குபற்றுவர் எனத் தெரியவருகிறது.

02

## ...ளிகோயிலுக்கு ...டுகள், கோழிகள்

...ன்னேஸ்வரம் பத்திரகாளி ...ன் கோவிலின் வேள்வி நடை ...ட்டாதென்று அறிவிக்கப்பட்ட ...ம் பலர் ஆடுகள், கோழி ... கோயிலுக்குக் கொண்டு ...னர். கோவிலில்

02

## நடிகை தன்யா ஓட்டம்

தமிழகத்தையும் தமிழர்களையும் அவதூறாக தனது பேஸ்புக்கில் எழுதிய நடிகை தன்யா பால கிருஷ்ணாவுக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியதால், தமிழகத்திலிருந்து பெங்களூருக்கு ஓட்டம் பிடித்தார்.

"ஏழாம் அறிவு", "காதலில் சொதப்புவது எப்படி" உட்பட சில படங்களில் சின்னச் சின்ன வேடங்களில் நடித்தவர் நடிகை தன்யா.

02

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

2012ஆம் ஆண்டிற்கான மூன் றாம் தவணை பாடசாலை நடவடிக்கைகள் இன்று ஆரம் பமாகின்றன.

எனினும் 2012ஆம் ஆண்டிற் கான 5ஆம் ஆண்டு புலை மைப் பரிசில் பரீட்சை விடைத் தாள்கள் திருத்தப்

02

## தமிழகத்தில் ஈழப் போராட்டம் நடத்திய ஐம்பது பேர் கைது

பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டு முகாம்களில் இலங்கைத் தமிழர்கள் பலர் தடுத்துவைக்கப்பட்டுள் ளனர். அவர்களை விடுதலை செய்யக் கோரியும், ம.தி.மு.க. உள்ளிட்ட சில அரசியல் கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டன. நேற்று பெரியார் திராவிட கழகத்தினர் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட் டனர்.

02

## குளியாப்பிட்டி பிரதேச சபை தலைவர் கைது

குளியாப்பிட்டி பிரதேச சபைத் தலைவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரத்மலேவத்த, வவகம என்ற பிரதேசத்தில் உள்ள இரண்டு வீடுகளுக்குத் தாக்குதல் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றுப் பகல் வேளையில் இப்பிரதேச சபைத் தலைவர் கைது செய்யப்பட்டதாக குளியாப்பட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மாகாணங்களின் எண்ணிக்கையை குறைக்க அரசு முயற்சி என்கிறார் சுரேஷ் எம்.பி

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்கள் இருக்கக் கூடாது என்பதற்காக இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களை ஏழாகக் குறைக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,கல்லடியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், 18வருடங்களாக வடக்கும் கிழக்கும் இணைந்திருந்தது. இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டது. 18வருடங்களின் பின்னர் ஜே.வி.பியினதும் அரசாங்கத்தினதும் முயற்சியின் காரணமாக பிரிக்கப்பட்டது. ஆனால் அது நிரந்தரமான பிரிப்பு அல்ல.

13ஆவது திருத்தச்சட்டம் அல்லது மாகாண சபை என்பது இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு அல்ல. 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள அதிகாரங்கள் ஒரு மாகாணசபையை சரியாக நடத்துவதற்கு போதுமானதாக அல்ல. எங்களுக்கு முழுமையான பொலிஸ் அதிகாரங்களோ காணி அதிகாரங்களோ நிதி அதிகாரங்களோ வரி வசூலிப்பதற்கான அதிகாரங்களோ கிடையாது. அதிகாரங்கள் மத்தியிலிருந்து ஆளுநரினூடாகவே வழங்கப்பட்டிருக்கின்றன.

ஒரு நாட்டில் மக்கள் மூலம் ஓர் அரசு தெரிவு செய்யப்பட்டால் ஓர் அமைச்சரவை உருவாகின்றது என்றார்.

## இப்படியும் கேட்கிறார் பழ. நெடுமாறன்

பாகிஸ்தான் இராணுவ வீரர்களுக்கும், இந்தியா பயிற்சி அளிக்குமா என்று உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ.நெடுமாறன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை ராணுவ வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு, சார்க் உடன்படிக்கையை மத்திய அரசு காரணமாகக் கூறுவதற்கு இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்தியாவில் எந்தப் பகுதியிலும் இலங்கை ராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதுரை தலைமை தபால் அலுவலகம் அருகே நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## தமிழகத்தில்...(தொடர்)

குமணன்சாவடி பஸ் நிலையம் அருகில் கட்சியின் பொதுச் செயலாளர் கோவை ராமகிருஷ்ணன், தலைமையில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் திரண்டனர்.

அங்கு அவர்கள் கோஷம் எழுப்பியபடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டம் செய்த பின்பு பூந்தமல்லி கரையான்சாவடி முகாம் நோக்கி முற்றுகை போராட்டம் நடத்த சென்றனர். அவர்களை பொலிசார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

கோவை ராமகிருஷ்ணன் உள்பட 50 பேர் கைது செய்யப்பட்டனர். கைதான அனைவரையும் பஸ்சில் ஏற்றி திருமண மண்டபத்துக்கு கொண்டு சென்றனர்.

## சட்டவிரோதமான முறையில்...(தொடர்)

தற்போது படகுகள் மூலம் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்கு பெருமளவானோர் புகலிடக் கோரிக்கையாளர்களாக நுழைகின்றனர். இவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தயாரில்லை

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் பாராளுமன்றில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. எனவே அவுஸ்திரேலியாவில் குடியுரிமையைப் பெற விரும்புபவர்கள் உரிய முறையில் விண்ணப்பம் செய்து புகலிடம் கோருவோருக்கு தொடர்ந்தும் வாய்ப்பளிக்கத் தயார் நிலையில் உள்ளது.

தற்போது சட்டவிரோதமான முறையில் பாதுகாப்பற்ற கடற் பயணங்களை தடுத்து நிறுத்துவதற்கு உலகின் அனைத்து நாடுகளும் முனைப்பு காட்ட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் பபுவா நியூகினியா மற்றும் நவுரு தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என கிறிஸ் போவன் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பற்ற படகுப் பயணங்களினால் பலர் கடலில் உயிரிழக்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனினும் அவற்றையும் பொருட்படுத்தாது தொடர்ந்தும் இப் பயணங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் பயணங்களை மேற்கொள்பவர்கள் இலங்கை மற்றும் இந்தியக் கடற்படையினரால் இடை மறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டும் வருகின்றனர். இதில் இலங்கையில் இருந்து செல்பவர்களது வீதம் அதிகமாக உள்ளது.

## தமிழர்களை...(தொடர்)

புத்தகம் ஒன்றை துபே வெளியிட இருக்கிறார். அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

ஜம்மு கஷ்மீரிலும் சர்வதேச எல்லைப் பகுதியிலும் தீவிரவாதி களை ஊடுருவுவதில் பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவின் நிலைத் தன்மையை நிலைகுலையச் செய்வதும் தீவிரவாதத்தை உயிர்ப்போடு வைத்திருப்பதும்தான் பாகிஸ்தானின் திட்டம்.

சீனாவைப் பொறுத்தவரை இந்தியாவுக்கு அது நேரடி அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய ஒரு நாடாகும்.

அணு ஆயுதங்கள் மூலம் இந்தியாவை சீனா மிரட்டுகிறது.

வங்கதேசத்தை பொறுத்தவரை வடகிழக்கு மாநில தீவிரவாத குழுக்களுக்கு முகாம் அமைக்க இடம் கொடுத்து அங்கிருந்து தீவிரவாதிகளை எல்லை கடக்க வைக்கிறது.

இதைமட்டுமின்றி வங்கதேசத்தை ஊடுருவச் செய்து ஆயுதவழியற்ற இன மோதலையும் வங்க தேசம் ஊக்குவித்து வருகிறது. அசாம் இப்பொழுது பற்றி எரிய இதுவே காரணம்.

இதேபோல்தான் இலங்கையும். தமிழர்களை அகதிகளாக்கி இந்தியாவின் அரசியலில் குழப்பத்தை தொடர்ந்து உருவாக்கி வருகிறது. வங்கதேசம் சக்மா அகதிகளை அனுப்பியது போல் இலங்கை ஈழத் தமிழர்களை அனுப்பி வருவது வாடிக்கையான ஒன்றாகிவிட்டது என்று அதில் கூறியுள்ளார்.

## பாடசாலைகள் இன்று...(தொடர்)

பணிகள் இடம்பெறும் பாடசாலைகள் இன்று திறக்கப்படமாட்டாது.

புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள திருத்தப் பணிகள் இடம்பெறும் 22 பாடசாலைகள் எதிர்வரும் 10ஆம் திகதியே ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## நடிகை தன்யா...(தொடர்)

பெங்களூரைச் சேர்ந்த இவர். தமிழ் சினிமாவில் நடிக்கும் ஆசையில், தமிழகத்துக்கு வாய்ப்புத் தேடி வந்தார்.

சென்னையிலுள்ள தனது தோழிகளுடன் தங்கியிருந்த அவர், சினிமா வாய்ப்பு தேடி, சினிமாக் கம்பனிகளில் ஏறி, ஏறி இறங்கினார்.

"ஏழாம் அறிவு" படத்தில் சிறிய வேடத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. இதையடுத்து தொடர்ந்து வாய்ப்புத்தேடி வந்தார். சமீபத்தில் வெளியான "காதலில் சொதப்புவது எப்படி" என்ற படத்திலும் சிறிய வேடம் கிடைத்தது.

இதையடுத்து பெரிய நடிகையாகி விட்டோம் என்ற மிதப்பில், பேஸ்புக்கில் தமிழர்களையும், தமிழகத்தையும் தரக்குறைவாக எழுதினார்.

சென்னை மக்களை "பிச்சைக் காரர்கள்" என்ற ரீதியில் அவரது கருத்து அமைந்திருந்தது. "கர்நாடகாவிடம் காவிரி தண்ணீர், மின்சாரம் தருமாறு தமிழகம் பிச்சை கேட்டது" என விமர்சித்து பேஸ்புக்கில் எழுதியிருந்தார்.

தமிழ் சினிமாக்களில் தொடர்ந்து நடிக்க வாய்ப்பு கேட்டு முகாமிட்டிருந்த அவரது கருத்துகளைப் படித்த தமிழகத்தைச் சேர்ந்த பலரும் பேஸ்புக்கில் நடிகை தன்யாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத தன்யா, பயந்து போய், பேஸ்புக்கில் மன்னிப்புக் கோரினார். இனிமேலும் தமிழகத்தில் இ[illegible] தால் பிரச்சினை ஏற்படும் என பயந்து போய், இரவோடு இரவாக சென்னையிலிருந்து கிளம்பி பெங்களூருக்கு ஓட்டம் பிடித்தார்.

## முன்னோடி அமர்வில்...(தொடர்)

இந்தக் கூட்டத்தொடருக்கு முன்னோடியான அமர்வுகள் இப்போது இடம்பெற்று வருகின்றது.

ஆகஸ்ட் 31ம் திகதி நடைபெற்ற இந்த அமர் வில் இலங்கையின் மனித உரிமை நிலைபற்றி ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

## தமிழர்களுக்கு எதிராக இந்திய...(தொடர்)

இந்தச் சூழ்நிலையில், இலங்கை நாட்டைச் சேர்ந்த கால்பந்து விளையாட்டு வீரர்கள் கால்பந்து விளையாட்டில் தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ளும் வகையில், நட்பு ரீதியிலான போட்டிகளில் கலந்து கொள்ள தமிழகம் வர மத்திய அரசு அனுமதி அளித்து இருக்கிறது.

மத்திய அரசின் இந்தச் செயல் தமிழக மக்களை அவமானப்படுத்தும் செயல் ஆகும். மத்திய அரசின் இந்தச் செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை நாட்டைச் சேர்ந்த கால்பந்து விளையாட்டு வீரர்கள் கால்பந்து விளையாட்டில் பயிற்சியை பெறும் வண்ணம், சென்னையில் உள்ள பாரத ரிசர்வ் வங்கியில் பணிபுரியும் அலுவலர் ஒருவரை ராயல் காலேஜ் ஆப் கொலம்போ நிர்வாகம் தொடர்பு கொண்டு, இங்குள்ள கால்பந்து அணிகளுடன் நட்பு ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டதாகவும், இதன் பேரில், பாரத ரிசர்வ் வங்கியின் அலுவலர் அதற்கான ஏற்பாட்டினை செய்ததாகவும், கடந்த 30ஆம் திகதி தமிழகம் வந்த இலங்கை கால்பந்து விளையாட்டு வீரர்கள் மறுநாள் சென்னை சுங்க இலாகா அணியுடன் நேரு விளையாட்டரங்கில் விளையாடியுள்ளதாகவும் எனக்குத் தகவல் வரப்பெற்றது.

இதனை அறிந்த நான் இது குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டேன். அந்த விசாரணையில், பாரத ரிசர்வ் வங்கி அலுவலர் நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியினை நடத்துவதற்கு வாய்மொழியாக நேரு விளையாட்டரங்கத்தின் பொறுப்பு அதிகாரியை அணுகியதாகவும், அதன் பேரில், நேரு விளையாட்டரங்கத்தின் பொறுப்பு அதிகாரி விளையாட்டுப் போட்டிகளுக்கு நேரு விளையாட்டரங்கத்தை பயன்படுத்த வாய்மொழியாக அனுமதி வழங்கியதாகவும் தெரிய வந்தது.

நேரு விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகளை அனுமதிக்க நேரு விளையாட்டரங்க பொறுப்பு அதிகாரிக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்குதான் இந்த அதிகாரம் உள்ளது.

தனக்கு இல்லாத அதிகாரத்தை பயன்படுத்தி இலங்கை விளையாட்டு வீரர்களை நேரு விளையாட்டரங்கில் கால்பந்து விளையாட அனுமதி அளித்ததன் மூலம் தமிழக மக்களின் உணர்வுகளை நேரு விளையாட்டரங்க பொறுப்பு அதிகாரி கொச்சைப்படுத்தியுள்ளார்.

எனவே, இந்த அதிகாரியை தற்காலிக பணிநீக்கம் செய்து துறைவாரியான நடவடிக்கை எடுக்கும்படி தலைமைச் செயலாளருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இலங்கை கால்பந்து வீரர்களுக்காக எந்த போட்டிகளும் தமிழகத்தில் நடத்தக் கூடாது என்று நான் உத்தரவிட்டுள்ளேன்.

இலங்கை கால்பந்து வீரர்களை இலங்கைக்கு உடனடியாக திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இதேபோன்று வேலம்மாள் மேல்நிலைப் பள்ளியுடன் கால்பந்து போட்டி விளையாட சென்னை வந்துள்ள இலங்கை, இரத்தினபுரியைச் சேர்ந்த ஹில்பர்ன் இன்டர்நஷனல் பள்ளியின் 8 மாணவர்கள் மற்றும் ஒரு பயிற்சியாளர் ஆகியோரையும் திருப்பி அனுப்ப நான் உத்தரவிட்டுள்ளேன் என்றும் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் 13...(தொடர்)

வெற்றிபெற முடியவில்லை. இந்த உண்மைகளை மறைத்துக் கருணாநிதி பேசுகிறார்"

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகையொன்றில் பழ. நெடுமாறன் எழுதிய கட்டுரை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## காளி கோயிலுக்கு...(தொடர்)

இருந்து 50 மீற்றருக்கு அப்பால் பொலிஸார் சோதனைச் சாவடிகளை அமைத்திருந்தார்கள். ஆடுகள், கோழிகளை ஏற்றிவந்த வாகனங்களை மறித்துச் சோதனையிட்ட பொலிஸார் அவற்றை கோவில் வளாகத்திற்கு கொண்டு செல்லாமல் தடுத்தனர். ஆலய தர்மகர்த்தாக்களின் எதிர்ப்பையடுத்து சில ஆடுகள், கோழிகள் கோவிலுக்கு கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் நடைபெறவிருந்த வேள்வி ஜனாதிபதியின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு...(தொடர்)

அங்கிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர்.

தமிழகத்தில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இலங்கை அகதிகள் உள்ளனர். இவர்களில் 68 ஆயிரம் பேர் அரசு அமைத்துள்ள 112 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபிறகு அங்கு அடிப்படை கட்டமைப்பு பணிகள் மற்றும் தமிழ் மக்களுக்கான குடியமர்வு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதையடுத்து ஐ.நா. தூதரின் மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் 5000 பேர் இலங்கைக்கு திரும்பினர்.

இவ்வாறு நாடு திரும்பும் அகதிகளை இலங்கை வரவேற்கும் என்றும், மேலும் பலர் நாடு திரும்ப வேண்டும் என்றும் அமைச்சர் வீரக்கோன் கேட்டுள்ளார்.

## தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை:

# வினாத்தாள் மோசடி தொடர்பாக அறிந்திருப்பின் தகவல் தாருங்கள்

### பொலிஸ் அறிவிப்பு

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெற்ற தினத்தன்று வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து தகவல் அறிந்தவர்களின் உதவியை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

இதன்படி, தகவல் அறிந்தோர் 011-2320141, 011-2320142, 011-2320143 போன்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி தகவல் வழங்க முடிவதோடு 011-2326937 என்ற இலக்கத்திற்கு தொலைநகல் செய்ய முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

தரம் ஐந்து ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மோசடி இடம்பெற்றுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக குற்றம் சுமத்திய இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் மஹிந்த ஜயசிங்கவை கடந்த 2012-08-28, 29, 30, 31 மற்றும் 04 திகதிகளில் வாக்குமூலம் அளிக்க வருமாறு அழைப்பு விடுத்தும் இதுவரை அவர் சமூகமளிக்கவில்லை என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் மோசடி இடம்பெற்றமை குறித்த விசாரணையை நிறைவு செய்ய மஹிந்த ஜயசிங்கவின் வாக்குமூலம் அவசியமானதென குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே நீதிமன்ற ஆணைப்படி அவரை வாக்குமூலம் அளிக்க அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு கூறியுள்ளது.

# இலங்கைக்கு வந்து நிலைமையை பாருங்கள்: ஜெயலலிதாவுக்கு அழைப்பு

இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலையை பார்வையிடுவதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா, இலங்கைக்கு வர வேண்டும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் அழைப்பு விடுத்துள்ளார்.

டெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர், இலங்கை வடக்கு மாகாணத்தில் அடுத்த ஆண்டு தேர்தல் நடத்தப்படும் என்றார்.

இதற்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இறுதிப் பட்டியல் தயாரான பின்னர் இது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் காரியவசம் கூறினார்.

தமிழக மீனவர்கள் தடை செய்யப்பட்ட நைலோன் வலைகளைப் பயன்படுத்தி, இலங்கை கடற்பகுதியில் மீன்பிடிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எனினும், அவர்களை தாக்கக் கூடாது என இலங்கை கடற்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் காரியவசம் தெரிவித்தார்.

இதேவேளை, செல்வி ஜெயலலிதா தமிழக முதல்வராக ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு உட்பட சகல வசதிகளும் கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தொண்டமானாற்றுக்கு குறுக்காகப் பாதை

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு வருகின்ற மக்களின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் தொண்டமானாறு ஆற்றுக்கு குறுக்காக புதிய வீதி அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நிதியுதவியுடன் அந்த வீதி அமைக்கப்பட்டுள்ளது. பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகஸ்தர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரின் பங்களிப்புடன் அந்த பாதை புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வீதிப்புனரமைப்பு பணி தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் உதயகுமார் கூறுகையில்,

செவ்சந்நிதிக்கு வருகை தரும் மக்கள் கடந்த காலத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்தனர். இதனால் ஆலயத்திற்கு வருகை தரும் மக்கள் பெரும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்கும் நோக்கில் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் நிதியுதவியுடன் அந்த பாதை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கான கிட்டத்தட்ட நான்கு இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

# கடும் வறட்சியால் குடாநாட்டில் கொடிய நோய்கள் பரவும் அபாயம்

யாழ்.குடாநாட்டில் வறட்சி காரணமாக தீவகம், காரைநகர், ஆகிய இடங்களில் தண்ணீர்த் தட்டுபபாடு ஏற்பட்டுள்ளதாக அப்பிரதேச குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.காரைநகர் தீவப் பிரதேசங்களில் வறட்சியினால் நீர் நிலைகள் வற்றியதால் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் உள்ள கிணறுகள் நீர் வற்றி வறண்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் அடிப்படைத் தேவைகளுக்கே தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பிரதேச மக்கள் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

யாழ்.காரைநகர் பிரதேசத்தில் பௌசர் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இருந்தும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத நிலை காணப்படுவதாக அம்மக்கள் குறிப்பிடுகின்றனர்.

தீவகம், காரைநகர் மட்டுமன்றி யாழ்.குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் கிணற்று நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றது. வற்றிய நீரை மக்கள் பயன்படுத்துவதன் காரணமாக வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நல்லூர் பிரதேச சபை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட கோண்டாவில், திருநெல்வேலி, கொக்குவில், நல்லூர் போன்ற இடங்களில் இருந்து கிணற்று நீரைச் சேகரித்து வறட்சி காரணமாக கிணற்று நீரில் கிருமி தொற்று ஏற்பட்டுள்ளதா என அறிவதற்காக யாழ்.மருத்துவ பீடத்தில் பரிசோதனைக்காக கொடுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

# வானைத் திருடிய மூவர் கைது

வான் ஒன்றை திருடிய குற்றச்சாட்டின் பேரில் சீதுவ பிரதேசத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வான் ஒன்று காணாமற்போன சம்பவம் தொடர்பில் இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதில் நீர்கொழும்பு, ஜாஎல பிரதேசங்களிலும் குறித்த நபர்கள் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

# சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டை தடுக்க சகல நாடும் இணைய வேண்டும்

### சவேந்திர சில்வா

தீவிரவாத அமைப்புகளுக்கு ஆயுதம் கிடைக்கப்பெற்ற வழிகள் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகச் சுலபமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சிறிய மற்றும் இலகு ரக ஆயுத பாவனை தொடர் பான ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் மூலம், சர்வதேசத்தில் ஆயுதங்கள் எவ்வாறு மலிந்து கிடக்கின்றன என்பது தெளிவாகப் புலனாவதாக சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். எனவே சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்த அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

# சுற்றுலா சென்ற யாழ்.மாணவன் பண்டாரவளையில் மாயம்

யாழ்ப்பாணத்தில் இருந்து மலைநாட்டுக்குச் சுற்றுலா சென்ற பாடசாலை மாணவன் ஒருவர் காணாமல் போன சம்பவம் பண்டாரவளையில் இடம் பெற்றுள்ளது.

யாழ்.வலிகாமம் கல்வி வலயத்தினால் கடந்த திங்கட்கிழமை பாடசாலை மாணவர்கள் சிலர் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு சென்ற மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு பண்டாரவளை முருகன் ஆலயத்தில் தங்கியுள்ளார்கள்.

அடுத்த நாள் காலையில் குறித்த மாணவன் ஆலயத்தின் முன்பாகவுள்ள தேநீர்க்கடைக்குச் சென்றுள்ளார். ஆனால் அங்கு சென்ற மாணவர் திரும்பி வரவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து மாணவர்களை அழைத்துச்சென்ற ஆசிரியர்கள் மாணவனை அயலில் தேடிய போதிலும் மாணவனைக் காணாத நிலையில் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை செய்துள்ளதுடன் பெற்றோர்களுக்கும் அறிவித்துள்ளார்கள்.

சுன்னாகம் கலைவாணி வாசிகசாலையடியில் வசிக்கும் சுரேஸ் குமார் பிரசாத், வயது 15 என்பவரே காணாமல் போனவராவார்.

# சந்திரகாந்தனின் காலத்தில் கிழக்கில் நீதியான ஆட்சி நடைபெறவில்லை

### ரணில் சொல்கிறார்

முன்னாள் முதலமைச்சர் சந்தரகாந்தனின் (பிள்ளையானின்) முதலமைச்சர் காலத்தில் கிழக்கு மாகாண சபையில் நீதியான நிர்வாகம் நடைபெறவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்திலேயே ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்துரையாற்றிய ரணில் விக்ர்மசிங்க.

நமக்கு இன்று தேவைப்படுவது நீதியான நிர்வாகமாகும். கடந்த கிழக்கு மாகாண சபை ஆட்சியின் போது பிள்ளையானால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை. நாங்கள் எல்லோரும் கேட்டது வடக்கில் தேர்தலை வையுங்கள் என்றே.

யுத்தத்திற்கு பின்னர் வடமாகாண மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமாக இருந்தால் வடமாகாண சபை தேர்தல் ஒன்று தேவையாகும். வடமாகாண தேர்தல் நடைபெற்றால் சிவில் நடவடிக்கையை அங்கு ஏற்படுத்த முடியும் எனக்கேட்டோம்.

இன்று நாட்டின் பிரச்சினைக்கு தேசிய மட்டத்திலான தீர்வு தேவையென கூறுகின்றோம். இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் சேர்ந்து இதற்காக தீர்வை காணமுடியும்.

இந்த பிரச்சினையை சர்வதேச பிரச்சினை இன்று சர்வதேச பிரச்சினையாக மாறியுள்ளது. அந்த பிரச்சினையை தீர்க்க வேண்டியுள்ளது. வடக்கே தேர்தலை நடத்தி கற்றறிந்த பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இன்று வாழ்க்கை சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் துஷ்பிரயோகம் நடைபெற்று வருகின்றன. இது அதிகரித்துள்ளது. பல்கலைக் கழக இஸட் புள்ளி விவகாரத்தில் மோசடி இடம்பெற்றது என்றார்.

# இன்றைய இராசி பலன் (03.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : உத்தரட்டாதி காலை 9.11 வரை அதன்பின் ரேவதி
**திதி** : திருதியை இரவு 9.34 வரை, அதன் பின் சதுர்த்தி
**சுபநேரம்** : 12.05 - 1.35
**இராகுகாலம்** : 7.35 - 9.05
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)
**மேடம்** : காரிய சித்தி, அதிகாரம், நினைத்ததை சாதித்தல்
**இடபம்** : முயற்சி பலிதம், தொழில் நன்மை, புதியன சேர்தல்
**மிதுனம்** : குடும்பச் சச்சரவு, வீண் முயற்சி, பணக்கஷ்டம்
**கடகம்** : நற்செய்தி, ஆர்வம் மிகுதி, அந்நியர் உதவி
**சிங்கம்** : ரோகபயம், வாக்குக் கலகம், எதிரிகள் தொல்லை
**கன்னி** : பணப்புழக்கம், தலயாத்திரை, மாமன்வழி உதவி
**துலாம்** : வீண்செலவு, தேகசுகக் குறைவு, அயலவர் தொல்லை
**விருச்சிகம்** : எதிர்பாராத செய்தி, முயற்சியின் மேற்பலன், இளையோர் உதவி
**தனுசு** : பணச்சேர்க்கை, வியாபார விருத்தி, குடும்ப சுகம்
**மகரம்** : காரிய தாமதம், வாக்கு கலகம், யோசனை மிகுதி
**கும்பம்** : தொழில் நன்மை, விவாக முயற்சி, மூத்தோர் உதவி
**மீனம்** : தொழில் இலாபம், வாகன சுகம், மனைவி வழி நன்மை

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# உலகின் 65நாடுகளில் இலங்கை அகதிகள்

## - மீள்குடியேற்றத்துறை

தமிழகத்திலும், இந்தியாவின் ஏனைய சில பகுதிகளிலும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கையர்களை மீள நாட்டுக்கு அழைப்பதற்கு அரசாங்கம் விருப்பத்துடன் இருப்பதாக மீள்குடியேற்றத்துறை அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் வருடத்தில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய அரசின் புள்ளி விபரங்களுக்கு அமைய தென்னிந்தியாவின் தமிழகத்தில் மாத்திரம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

அதில் 68 ஆயிரம் பேர் வரை இந்திய மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் 112 முகாம்களில் தங்கியுள்ளனர். 32 ஆயிரம் பேர் வரை வெளிமாவட்டங்களில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், யுத்தம் நிறைவடைந்த பின்னர் மீண்டும் நாடு திரும்பிய இலங்கை அதிகளின் எண்ணிக்கை 5 ஆயிரம் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகள் ஆணையகம் தகவல் வெளியிட்டுள்ளது. இலங்கை அகதிகள் உலகில் 65 நாடுகளில் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்க பிரதேச சபையின் மற்றுமொரு அறிவுறுத்தல்

(சண்டிலிப்பாய்)

டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பான தகவல்களை மக்களிமிருந்து உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்காக கிராமிய ஒருங்கிணைப்பு குழு அங்கத்தவர்களின் விபரங்களை பொது இடங்களில் காட்சிப் படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது.

டெங்கு நோயிள் தாக்கத்தை நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் செயற்படுத்தப்படும் டெங்கு ஒழிப்பு செயற்பாட்டிற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே இச் செயற்பாடு மேற் கொள் ளப்படவுள்ளது.

இதற்கமைய கிராமிய ஒருங்கிணைப்பு குழு அங்கத்தவர்களின் பெயர். விலாசம், தொலைபெசி இலக்கம் போன்ற முக்கிய விபரங்களை கிராமத்தில் பொது இடங்களில் காட்சிப்படுத்துமாறு பிரதேச செயலகங்களினால் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காட்சிப்படுத்துவதன் மூலம் டெங்கு பெருகும் என இனங்கண்ட இடங்கள் பற்றிய தகவல்களை மக்கள் இலகுவாக வழங்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை உயர்தர மாணவிகளுக்கு 10ஆம் திகதியே வகுப்புகள்

வேம்படி மகளிர் கல்லூரியில் க.பொ.த.உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவிகள் எதிர்வரும் பத்தாம் திகதியே பாடசாலைக்குச் சமூகமளிக்க வேண்டுமென்று அதிபர் திருமதி க.முத்துக்குமாரன் அறிவித்துள்ளார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நிலையமாகக் கல்லூரிதொழிற்பட உள்ளதாலேயே மேற்கண்டவாறு அவர் அறிவித்துள்ளார்.

எனினும் ஏனைய வகுப்பு மாணவிகளை இன்று மூன்றாம் தவணை ஆரம்பத்தில் பாடசாலைக்குச் சமூகமளிக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

அநுராதபுர போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் டாக்டர் சமிலஹேரத் என்பவர் ஆளும் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளரான பேர்ட்டி பிரேமலால் திசநாயக்காவின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார் என்று சொல்லப்படுகின்றது.

தாக்கியவர்களை கைது செய்யாவிட்டால் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடாத்தப் போவதாக அரசாங்க மருத்துவ அதிகாரி சங்கம் எச்சரித்துள்ளது.

டாக்டர் ஹேரத் அவசர அழைப்பொன்றையடுத்து வீட்டிலிருந்து ஆஸ்பத்திரிக்குக் காரில் சென்று கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு இலக்கானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு மாணவர்களால், பிரிட்டனுக்கு வருடாந்தம் 5 பில்லியன் பவுண்ஸ்

ஐக்கிய ராஜ்ஜியத்தில் கடந்த 2010 - 2011 ஆண்டில் பட்டப் படிப்பு படிப்பவர்களில் 11 சதவீதத்தினர் வெளிநாட்டவர். அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணம் பல்கலைக்கழகங்களின் கட்டண வருவாயில் மூன்றில் ஒரு பங்காக இருக்கிறது. வெளிநாட்டு மாணவர்கள் கல்விக் கட்டணம் மற்றும் பிற செலவினங்கள் காரணமாக ஐக்கிய ராஜ்ஜியத்தின் பொருளாதாரத்துக்கு 5 பில்லியன் பவுண்டுகள் கிடைக்கிறது என்று கணிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மாணவர்களின் சேர்க்கை அதிகரித்தால் வரும் 2025ஆம் ஆண்டளவில் இத்தொகை 17 பில்லியன் டாலர்கள் என்ற அளவுக்கு உயரும் என்று பல்கலைக்கழகங்கள் கூறுகின் றன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வெளியில் இருந்து வரும் மாணவர்கள் விசா பெறத் தேவையான பரிந்துரை வழங்கும் உரிமத்தை லண்டன் மெட்ரோ பொலிடன் பல்கலைக்கழகத்திடம் இருந்து ஐக்கிய ராஜ்ஜியத்தின் எல்லைக் காட்டுப்பாட்டு ஆணையம் (யூகேபிஏ) பறித்துள்ளது.

இலங்கை மாணவர்கள் உட்பட இரண்டாயிரத்துக்கும் வெளிநாட்டு மாணவர்களின் நிலை பரிதாபகரமாகியுள்ளது. வேறு பல்கலைக்கழகங்களில் சேருவதற்கு இவர்களுக்கு இரண்டு மாதங்கள் அவகாசம் வழங்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மெட்டோபொலிடன் பல்கலைக்கழகம் தொடர்பில் கண்டறியப்பட்ட குற்றச்சாட்டுக்களை நீக்குவதற்கு ஆறு மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என எல்லைக் கட்டுப்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

முறையான விசா முடிந்தோர் அந்தப் பல்கலைக்கழகத்தில் படிப்பதும், போதுமான ஆங்கிலப் புலமை இல்லாதவர்கள் படிப்பதும், பல்கலைக்கழக மாணவர்களாக இருப்பவர்கள் வகுப்புக்கு ஒழுங்காக வர வேண்டும் - முழு நேர வேலைக்கு போகக் கூடாது என்ற விதி மீறப்படுவதும் இந்த நடவடிக்கை எடுக்கக் காரணம் என்று ஐக்கிய ராஜ்ஜியத்தின் குடிவரவு அமைச்சர் தெரிவிததுள்ளார்.

ஐக்கிய ராஜ்ஜியத்தில் பல்கலைக்கழகங்களுக்கு அரசால் வழங்கப்படும் நிதி பெருமளவு குறைகப்படுவதால் பல பல்கலைக் கழகங்கள் வெளிநாட்டு மாணவர்களை சேர்க்க முனைப்பு காட்டுகின்றன. இதற்கு உள்நா[illegible] மாணவர்களை விட வெளிநாட்டு மாணவர்கள் கூடுதலான கட்டணத்தை செலுத்த வேண்டும்.

அரசாங்கம் எடுக்கும் கடும் நடவடிக்கைகள் காரணமாக படிக்க்க வேண்டும் என்ற உண்மையான விரும்பம் கொண்ட மாணவர்கள் கூட ஐக்கிய ராஜ்ஜியத்தை தவிர்க்கக்கூடும் என்ற கருத்தை தேசிய மாணவர் சங்கம் வெளியிட்டுள்ளது. இந்த முடிவை அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தேசிய மாணவர் சங்கத்தின் தலைவர் லியம் பர்ன்ஸ் கோரியுள்ளார்.

அரசின் முடிவை சட்ட ரீதியாக எதிர்கொள்வது குறித்து தாம் ஆலோசித்து வருவதாக பல்க[illegible]லைக்கழகத்தின் துணை வேந்[illegible] மால்கம் கில்லிஸ் தெரிவித்[illegible]ளார்.

# புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள்

(சண்டிலிப்பாய்)

கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட விரும்பும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

கடற்றொழில் மூலம் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கும், வாழ்வாதாரத்தினை நாடுவோருக்கும் இத்தகைய உதவிகள் வழங்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு பெற்றவர்கள் இந்த கடற்றொழில் உபகரணங்களைப் பெற் றுக்கொள்ள முடியும்.

தமது பெயர் விபரங்களை உரிய கிராம அலுவலர்களிடம் பதிவு செய்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகங்களினால் கோரப்பட்டுளளது.

# அக்கரைப் பற்றில் தேசிய காங்கிரஸ், மு.கா. ஆதரவாளர்கள் மோதல்

அக்கரைப்பற்றில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்களும் தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது. இந்த மோதலில் ஆறு வாகனங்கள் தாக்கிச் சேதப் படுத்தப்பட்டன. தாக்குதல் நடாத் தியவர்களை கைது செய்யுமாறு கோரி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்கு வெளியே முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சுமார் இரண்டு மணித்தியாலங்களாக சத்தியாக்கிரகப் போராடடத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லீம் காங்கிர ஸின் எம்பிக-ளான ஹசன் அலியும் ஹரிசும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் நாஸி சின்னத்துடன் ஹிட்லர் பெயரில் துணிக்கடை

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்திலுள்ள அஹ்மதாபாத் நகரில் அமைந்திருக்கும் துணிக்கடை ஒன்றிட்குர் வைடநச எனும் பெயர் சூட்டப்பட்டிருப்பதுடன் அதிலுள்ள எழுத்திற்கு மேலே நாஸிகளின் ஸ்வஸ்திகா குறியீடு இடப்பட்டும் உள்ளது.

ஆண்களுக்கான மேற் கத்தேய பாணியிலான உடைகளை விற்கும் இக் கடை திறக்கப்பட்டு 10 நாட்களே ஆகியுள்ளன. இந்நிலையில் இக் கடையின் உரிமையாளர் செய்திச்சேவை ஒன்றிற்கு விளக்கம் அளிக்கையில்,

இக்கடையின் விளம்பரப் பலகை, அடையாளச் சின்னம், வியாபார அட்டை, மற்றும் பிராண்ட் ஆகியவற்றுக்கான செலவை யாரும் ஈடுகட்டுவார்கள் எனில் தான் தனது ஹிட்லர் பெயரை மாற்றுவதற்குத் தயாராக உள்ளேன் எனக் கூறியுள்ளார்.

அதாவது இதற்காக இவர் கேட்கும் மொத்தப் பணம் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரம் ஆகும்.




இவர் மேலும் கூறுகையில் இக் கடையைத் தான் திறக்கும் போது ஹிட்லர் யாரென தனக்குத் தெரியாது எனவும் இக் கடையின் பங்குதாரரான தனது பெரியப்பா மிகவும் கண்டிப்பானவர் என்பதால் தான் ஹிட்லர் என்ற பெயர் தெரிவு செய்யப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை அஹ்மதாபாத்திலுள்ள யூதர்களின் சமூகம் இந்தக் கடை உரிமையாளரின் நடத்தைக்கு வருத்தம் தெரிவித்திருப்பதுடன் இவர்களின் சமூகத்தைச் சேர்ந்த மூத்த இஸ்ரேல் ராஜதந்திரி ஒருவர் இஸ்ரேல் தூதரகம் ஒரு உறுதியான வழியில் இதற்கு நடவடிக்கை எடுக்கும் வரை முயற்சி செய்வோம் என்று கூறியுள்ளார்.

# குளியல் பாத்திரத்திற்குள் விழுந்து இரண்டு வயதுப் பாலன் பலி

(வல்வெட்டித்துறை)

குளியல் பாத்திரத்திற்குள் வீழ்ந்து இரண்டு வயது பாலகன் ஒருவன் மரணமான இச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் வல்வெட்டித துறை கொற்றாவத்தை பல்லந் தோட்டம் என்ற இடத்தில் இடம்பெற்றது. தாயும் மகனும் தூங்கிக் கொண்டிருந்தபோது நித்திரை விட்டெழுந்த இந்தப் பாலகன் தவழ்ந்து வந்து நீர் நிரப்பப் பெற்ற பாத்திரத்திற்குள் வீழ்ந்து மரணமானான்.

செ.அகிம்சயன் என்ற பாலகனே மரணமானான்.

# மேலாதிக்க சக்திகளை எதிர்த்துநிற்க முடியும் என்பதை ஈரானும் இலங்கையும் நிரூபித்துள்ளன

**ஈரானிய ஆன்மீக தலைவர்**

மேலாதிக்க சக்திகளை எதிர்த்து நிற்க முடியும் என்பதை ஈரானும் இலங்கையும் நிரூபித்துள்ளதாக ஈரானிய ஆன்மீக தலைவர் ஆயதுல்லா அலி கமேனி கூறியுள்ளார்.

ஈரானிய தலைநகர் தெஹ்ரானில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தாம் தோற்கடிக்கப்பட முடியாதவை என காட்டுவதற்கு மேலாதிக்க சக்திகள் முனைந்தன. ஆனால் அவற்றை எதிர்த்து நிற்பது சாத்தியம் என்பதை ஈரானும் இலங்கையும் நிரூபித்துள்ளன என ஈரானிய ஆன்மீகத் தலைவர் கமேனி கூறினார்.

சர்வதேச அரங்கில் வலுவாக இருப்பதற்கும் பரந்த நலன்களை பாதுகாப்பதற்கும் முஸ்லிம் நாடுகளுக்கிடையில் நெருங்கிய நட்புறவு வளர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பலஸ்தீன நாட்டிற்கு இலங்கை அளிக்கும் ஆதரவுக்கும் இலங்கை முஸ்லிம் சமூகத்தை மதிப்பதற்காகவும் இலங்கையை அவர் பாராட்டினார். ஈரானுடன் உறவுகளை விருத்தி செய்வதில் இலங்கை ஜனாதிபதி காட்டும் ஆர்வத்தையும் அவர் வரவேற்றார். அணிசேரா மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஈரானிய ஆன்மீக தலைவர் முன்வைத்த அணுவாயுதமற்ற மத்திய கிழக்கு யோசனை மற்றும் பலஸ்தீனம் தொடர்பாக அவர் கொண்டுள்ள நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராட்டினார். பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கையின் போர் மற்றும் இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் உரிமைகளை பேணுவதற்கான முயற்சிகள் ஆகியவற்றை ஜனாதிபதி விளக்கினார். "உங்கள் உதவிகள் மூலம் பல பிரச்சினைகளை நாம் வெற்றிகொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம்'' எனவும் அவர்தெரிவித்துள்ளார்.

# கல்முனைக் கடலில் மூழ்கி இளைஞர்கள் இருவர் பலி

கல்முனை, பெரிய நிலாவணை கடற்பகுதியில் குளிக்கச் சென்ற இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இவ் உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் கல்முனை மற்றும் பண்டிரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

21 வயதுடைய இளைஞர்கள் இருவரது சடலங்களும் கல்முனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கூறாய் கிராமத்திற்கு போக்குவரத்து வசதி

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கூறாய் கிராமத்திற்கான போக்குவரத்துச் சேவையை மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கம் கடந்த சனிக்கிழமை காலை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்துள்ளது.

இலுப்பைக்கடவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதீப் விஜயசேகர, குறித்த கிராம மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து பிரச்சினைகள் தொடர்பாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்த போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் தனியார் பேரூந்து சங்கத்தின் தலைவர் ரீ.ரமேஸ் தெரிவித்தார்.

குறித்த தனியார் பேருந்து சேவையானது, சீதுவிநாயகர்புரம், கூறாய், ஆத்திமோட்டை, புதுக்குளம், விடத்தல் தீவு, அடம்பன், ஆண்டாங்குளம் ஊடாக மன்னாரை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக குறித்த கிராம மக்கள் போக்குவரத்துச் சேவைகள் எவையும் இன்றி தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

# விளையாட்டுக் கழகங்கள் சமூகப்பணி செய்யக் கூடியவையாக இருக்க வேண்டும்

**- சில்வேஸ்திரி அலன்ரின் எம்.பி**

விளையாட்டுக் கழகங்கள் சமூகப் பணியாற்றக் கூடியதவறும், அழிவடைந்து வருகின்ற கலை. கலாசார,பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்கக்கூடியதாகவும் செயற்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,தீவக பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின்(உதயன்) தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகமும், சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய உதைபந்தாட்டம், கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்ட நிகழ்வும்,பரிசளிப்பு விழாவும் கடந்த 29ம் திகதி ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கில் நடைபெற்றபோது, நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், விளையாட்டுக் கழகங்கள் தமது செயற்பாடுகளை மேம்படுத்தி, வீரர்களது மெய்வன்மைத் திறமைகளை வெளிப்படுத்துவதுடன், பிரதேசங்களிலுள்ள ஒவ்வோர் விளையாட்டுக் கழகமும் குறித்த பிரதேசங்களில் சமூகப் நலச்செயற்பாடுகளை முன்னெடுத்து, அழிவடைந்து வருகின்ற பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுக்கக்கூடியவாறு செயற்பட வேண்டும் என்றார்.

# ஸ்ரீல.மு.கா தலைவர் காலையில் ஒன்றும் மாலையில் மற்றொன்றும் பேசும் நிலையற்ற கொள்கையுள்ளவர்

**சிரேஷ்ட அமைச்சர் பௌசி**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நிலையான கொள்கையுடையவர் அல்ல. அவர் காலையில் ஒரு பேச்சும் மாலையில் ஒரு பேச்சும் பேசக்கூடிய நிலையற்ற கொள்கையுடையவர் என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியை ஆதரித்து வாழைச்சேனை, மாவடிசேனை பிரதேசத்தில் வாழைச்சேனை பிரதேசசபை உறுப்பினர் ஜே.அல்பத்தாஹ் தலைமையில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் இன்று அமைச்சரவையில் ஒரு பேச்சும் நாடாளுமன்றத்தில் ஒரு பேச்சும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பேச்சாகவும் இடத்திற்கு இடம் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்.

இது சிறந்த தலைமைத்துவத்திற்கு ஏற்ற பண்பல்ல. எப்போதும் நாம் கொண்டுள்ள கொள்கையில் நிலையான உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அதுதான் ஒரு நல்ல மனிதருக்கான பண்பாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தால் பள்ளிவாசல்கள் உடைக்கப்படும் என்று கூறும் ரவூப் ஹக்கீம், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவை ஆதரித்து பேசும்போது மஹிந்தவுக்கு வாக்களித்தால் பள்ளிவாசலில் வாங்கு சொல்ல முடியாது என்று கூறினார் என்றார்.

# அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

**வலிகாமம்**

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமான மீளாய்வுக் கூட்டம் எதிர் வரும் 07 ம் திகதி யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஒவ்வொரு துறையும் தனித்தனியாக ஆராயப்படவுள்ளது.

விவசாய அபிவிருத்தவிச் செயற்பாடுகள் சுகாதார அபிவிருத்தி செயற்பாடுகள் போக்குவரத்து அபிவிருத்தி செயற்பாடுகள் மின்சார அபிவிருத்தி வெயல்பாடுகள் மின்சாரம் கைத்தொழில் கல்வி கடற்றொழில் உள்ளிட்ட பல துறைகளின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளன.

முழுநாள் செயல் அமர்வாக இடம் பெறும் இந்த செயல் திட்டத்தில் அனைத்துத் துறை சார்ந்தவாகளும் கலந்துகொள்ள ஏற்பாடுகள் யாழ். செயலகத்தின் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு விமானநிலைய அபிவிருத்தி

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கான பாரிய அபிவிருத்தி பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இது மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பெரும் உறுதுணையாக அமையும் எனவும் மட்டு. மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இதற்கென 100 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக தாகவும் அவர் கூறினார்.

1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு விமான நிலையம் 52 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

# தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு: பெப்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்க இன்னும் ஒருவாரமே இருக்கின்ற நிலையில், அங்கு தேர்தல் சட்ட மீறல்களும் வன்முறைகளும் கடந்த சில தினங்களில் அதிகரித்துவருவதாக தேர்தல் கண்காணிப்புக் குழுவான பெப்ரல் அமைப்பு கூறுகிறது.

அநுராதபுரம் மாவட்டத்தில் கட்சி ஆதரவாளர்களால் இரண்டு தினங்களுக்கு முன்னர் கடுமையாக தாக்கப்பட்ட மருத்துவர் ஒருவர் இன்னும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் கடந்த வியாழன் இரவு கடமைக்குச் சென்றுகொண்டிருந்த மருத்தவர் ஒருவரை கடுமையாக தாக்கியதாக முறைப்பாடு கிடைத்துள்ளதென பெப்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆரச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

மருத்துவர் மீதான தாக்குதலை கண்டித்து அநுராதபுரம் வைத்தியசாலை மருத்துவர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூன்றுபேரை பொலிஸார் கைது செய்திருந்தாலும் மற்றவர்களும் கைதுசெய்யப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் கோரிக்கை விடுத்திருப்பதாக ரோஹன ஹெட்டி ஆரச்சி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்ட அக்கரைப்பற்று பிரதேசத்திற்கு சிறப்பு பொலிஸ்குழுவொன்று தேவைப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

அதுபற்றி தேர்தல்கள் ஆணையாளரும் கண்காணிப்பாளர்களும் பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்திற்கும் சிறப்பு பொலிஸ் அணி தேவை என்றும் ஹெட்டி ஆரச்சி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஆயுதந்தாங்கிய குழுவினர் பகிரங்கமாக நடமாடாவிட்டாலும் அப்படியான ஆயுதக்குழுக்களிடமிருந்து அச்சுறுத்தல்கள் வரலாம் என்று மக்கள் மத்தியில் பீதி உள்ளதாகவும் பெப்ரல் அமைப்பின் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் இதுவரை பதிவாகியுள்ள 180 சம்பவங்களில் 13 தாக்குதல் சம்பவங்களும் 17 அச்சுறுத்தல் சம்பவங்களும் அடங்குகின்றன. இந்த 17 அச்சுறுத்தல் சம்ப வங்களில் கிட்டத்தட்ட எல்லாமே கிழக்கு மாகாணத்திலேயே நடந்திருப்பதாக பெப்ரல் அமைப்பு கூறுகிறது.இதுதவிர கட்சி அலுவலகங் களையும் வாகனங்களையும் ஏனைய சொத்துக்களையும் சேதப்படுத் திய சம்பவங்களும் மூன்று மாகாணங்களிலும் பரவலாக நடந்துள்ளன.

வடமத்திய மாகாணத்தில் பதிவான 77 சம்பவங்களில் 65 சம்பவங்களும் அநுராதபுரத்திலேயே நடந்திருப்பதாக தேர்தல்கள் செயலகம் கூறுகிறது.

தமிழ்நாதம்
Thamil Naatham

செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை

## அணிசேரா இயக்கம் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்

ஈரானின் தலைநகரான தெஹ்றானில் அணிசேரா இயக்கத்தின் பதினாறாவது மாநாடு கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கைக் கொண்ட 120 நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகளே இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன. யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ, எகிப்திய அதிபர் அப்துல் கமால் நாசர், இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ உள்ளிட்ட பல முக்கிய தலைவர்கள் அணிசேரா அமைப்பின் ஆரம்ப கர்த்தாக்களாகத் திகழ்ந்தனர்.

உலகம், மேலாதிக்க வல்லரசுகளின் பிடியில் இருந்தபோது மூன்றாம் உலக நாடுகளால் உருவாக்கப்பட்டதே அணிசேரா இயக்கமாகும். அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் தமது செல்வாக்குப் பிராந்தியங்களாக உலகைக் கூறுபோட முனைந்தபோதே அணிசேரா இயக்கம் உருவெடுத்தது. 1961ஆம் ஆண்டு யூகோஸ்லாவியாவில் அணி சேரா இயக்கம் ஆரம்பமானது. ஆறு மாநிலங்களைக் கொண்ட யூகோஸ்லாவியா இன்று பல தேசங்களாகப் பிளவுபட்டுப் போய் விட்டது.

1976ஆம் ஆண்டு அணிசேரா இயக்கத்தின் ஐந்தாவது உச்சி மாநாடு இலங்கையில் இடம்பெற்றது. பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் கொழும்பில் நடைபெற்ற இந்த மாநாடு, ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாக அமைந்தது. அப்போது இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருந்தன. அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை பெட்டை நாய் என்றும் சூனியக்காரி என்றும் வர்ணிக்கும் அளவுக்கு இந்தியா, சோவியத் சார்பு நிலைப்பாட்டை எடுத்திருந்தது,

பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை அன்று அணிசேரா நாடுகள் ஆதரித்தன. காலனித்துவ எதிர்ப்புக் கொள்கையையே இந்த நாடுகள் எடுத்திருந்தன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் போராட்டங்களை அணிசேரா அமைப்பு ஆதரித்த காலம் அன்றையது.

இன்று நிலைமைகள் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. இலங்கைக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவை மாநாட்டில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்கு இந்தியாவும், லிபியாவும் ஆதரவளித்தன. இதே போன்று இன்று சிறிய பிரச்சினைகளால் அணிசேரா நாடுகள் பிளவுபட்டு நிற்கின்றன. 1976ம் ஆண்டு ஐந்தாவது உச்சிமாநாடு கொழும்பில் நடைபெற்றபோது இஸ்ரேலைக் கண்டித்து அறிக்கை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அமெரிக்கா அழுத்தம் கொடுத்தது. ஆனாலும் சிறீமா பண்டாரநாயக்கா அரசாங்கம் அதற்கு வளைந்து கொடுக்க மறுத்தது.

இன்று இந்தியா, அமெரிக்காவுடன் நெருக்கமான இராணுவ, பொருளாதார உறவுகளை வைத்திருக்கிறது. 1990 களில் ஆரம்பத்தில் சோவியத் ரஷ்யா பல நாடுகளாகப் பிரிந்து போனது. அதன் பின்னர் அமெரிக்கா மட்டுமே ஒரேயொரு மேலாதிக்க வல்லரசாக இன்னமும் திகழ்ந்து வருகின்றது. அன்று இஸ்ரேலிய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்திருந்த இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் இன்று இஸ்ரேலுடன் இராஜதந்திரத் தொடர்புகளை கொண்டிருக்கின்றன. ஆயுதப் பரிகரணம், உலக மூலவளங்களைப் பகிர்ந்துகொள்வது போன்ற விடயங்களில் அணிசேரா நாடுகள் அன்று உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருந்தன. இன்று அணிசேரா அமைப்பிலுள்ள சில முக்கிய நாடுகள் அமெரிக்காவின் தொங்கு சதைகளாக மாறியுள்ளன.

அமெரிக்காவைப் பொறுத்தவரை ஈரான் ஓர் எதிரி நாடாகவே கருதப்படுகிறது. 1979ம் ஆண்டு ஆயத்துல்லா கொமெய்னியின் புரட்சிக்குப் பின்னர், ஈரான் எந்தஒரு மேலாதிக்க வல்லரசுக்கும் சார்பான நிலைப்பாட்டை எடுக்கவில்லை பனிப்போர் இடம்பெற்ற காலத்திலும், பனிப் போருக்கு பிந்திய காலத்திலும் கூட ஈரான் எந்தவொரு வல்லரசு நாட்டினதும் கைப்பொம்மையாக இருந்ததில்லை. அணிசேரா அமைப்பின் ஈரான் மாநாட்டுக்கும் பின்னர் அது ஓர் சக்தி வாய்ந்த அமைப்பாக தோற்றம் பெறுமெனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்ததைப் போன்று ஆக்கபூர்வமான எதுவுமே நடைபெறவில்லை. வெறும் சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளின் களமாக ஈரான் மாநாடு நடந்தமை வேதனைக்குரியது.

கடந்த ஐம்பது வருடங்களிற்கு மேற்பட்ட அணிசேரா இயக்க வரலாறு "கழுதை தேய்ந்து கட்டெறும்பான" கதையாகி விட்டது அணிசேரா இயக்க நாடுகள், ஐக்கிய நாடுகள் சபை போன்ற பொது அமைப்புகளில் பொதுவான நிலைப்பாட்டை எடுக்கும் நிலைமை இன்றில்லை. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியும் உலகளாவிய ரீதியில் நிகழ்ந்த மாற்றங்களும் அணிசேரா இயக்கத்தை இன்று அர்த்தமற்ற ஒன்றாக ஆக்கிவிட்டிருக்கிறது. இப்போதும் கூட அமெரிக்கா ஒரு மேலாதிக்க வல்லரசு நிலைப்பாட்டையே எடுத்து வருகிறது. அணிசேரா இயக்கத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் தமது வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து கொண்டு ஆக்கபூர்வமாகச் செயற்பட முன்வர வேண்டும். உயிர்த் துடிப்பு மிக்க அமைப்பாக அது செயற்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# சீனாவின் தேசிய பாதுகாப்பு வேலைகள் எவருக்கும் இராணுவ அச்சுறுத்தலாகாது

## - சீனப் பாதுகாப்பு அமைச்சர்

சீன பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில் உரை "சீனாவின் சட்டபூர்வமான தேசிய பாது காப்பு நடவடிக்கைகள் ஓர் இராணுவ அச்சுறுத்தலெனச் சிலர் கூறிவருகின்றனர். இவர்களில் சிலருக்குச் சரியான புரிந்துணர்வு இல்லை. இன்னும் சிலர் பனிப்போர் மனநிலையிலிருந்து கொண்டு இவ்வாறு கூறுகின்றனர்" என்று மக்கள் சீனக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், ஜெனரல் லியாங் குவாங்லி தெரிவித்தார்.

ஐந்துநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த புதன்கிழமை இலங்கை வந்து சேர்ந்த சீன பாதுகாப்பு அமைச்சர் கடந்த வியாழக்கிழமை சப்புகஸ்கந்தை பாதுகாப்புச் சேவைகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு அவர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார். "சீனாவின் சமாதான அபிவிருத்தியும், அதன் தேசிய பாதுகாப்புக் கொள்கையும்" என்ற தலைப்பில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் உரையாற்றினார்.

உலகில் சமாதானம், ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்த சீனா அர்ப்பணிப்புடன் செயற்படும். இதற்காகச் சகல நாடுகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட சீனா தயாராக வுள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காகவே தெற்காசிய நாடுகளுடன் சீனா உறவுகளைப் பேணிவருகிறது. இதைத்தவிர எந்தவொரு மூன்றாம் தரப்பையும் இலக்கு வைக்கும் நோக்கம் சீனாவுக்குக் கிடையாது.

பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி எயார் சீப் மார்ஷல் றொஷான் குணதிலக்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம உட்பட அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்:-

சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியிலும் சீன - இலங்கை உறவு, சிறந்த முறையில் பேணப்பட்டமை விசேட அம்சமாகும். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே நினைவு தெரிந்த காலம் தொட்டு நட்புறவு இருந்து வருகிறது. முன்னைய காலத்தில் இலங்கை "சிங்க இராசதானி" (Lion Kingdom) என்றே அழைக்கப்பட்டது. இந்து சமுத்திரத்தில் இலங்கை ஒரு அழகான ஒரு முத்தைப் போன்றது. பண்டைய காலத்தில் சீனாவிலிருந்து பௌத்த பிக்குமார் இலங்கை வந்தனர். அத்துடன் தெற்காசியாவில் உள்ள அண்டைய நாடுகளுடனும் வர்த்தகத்தையும், கலாசார பரிமாற்றங்களையும் ஊக்குவிக்கும் நோக்கம் சீனாவுக்கு உண்டு. இதில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கிறது.

சீன மக்கள் குடியரசை முதல் முதலாக அங்கீகரித்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இரு தரப்பு இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து இலங்கை சீன நட்புறவு சிறப்பாக பேணப்பட்டு வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியிலும் சிறப்பாகப் பேணப்பட்டு வருகிறது. இலங்கைக்கு விஜயம் செய்யும் சீனாவின் முதலாவது பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன், சீனாவில் சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதன் தேசிய வலிமையும், சர்வதேச அக்கறையும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளன. சீனா அதன் விஸ்தரிப்பைப் பலவந்தமாக மேற்கொள்ளும் என்ற சந்தேகம்



சர்வதேச சமூகத்தில் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. அதனை சீனாவின் அச்சுறுத்தல் கொள்கை என்ற வகையில் அவர்கள் பரப்பி வருகின்றனர்.

உலக சமாதானத்தை பேணும் வகையில் சீனா அதன் அபிவிருத்தியை மேற்கொள்ளும் அதே வேளை, அதன் அபிவிருத்தி மூலம் உலக சமாதானத்துக்கும் பங்களிக்கும். உலகின் நிலையான சமாதான மற்றும் பொதுவான சுபீட்சம் ஆகியவற்றை கட்டியெழுப்ப சீனா அர்ப்பணிப்புடன் செயல்படும். சீன மக்கள் சமாதானத்தின் பெறுமதியையும், துரித அபிவிருத்தியின் முக்கியத்துவத்தைப் பற்றியும் அறிந்திருந்தனர். சீன மக்கள் குடியரசு ஸ்தாபிக்கப்பட்ட பின் பல்வேறு துறைகளில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. எனினும் அதிக மக்கள் தொகை, நலிவான பொருளாதார அடிப்படை ஆகியவை காரணமாக சீனாவில் தேசிய அபிவிருத்தி சமனற்ற நிலையில் உள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற ரீதியில் சீனாவின் முக்கிய பணி, பொருளாதார ஊக்குவிப்பு மற்றும் சமூக அபிவிருத்தி ஆகியவற்றுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும். எனவே சமாதான அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் பல தலைமுறைகளாக நாம் நேரான பாதையிலிலேயே செல்கின்றோம்.

இன்றைய உலகின் சமாதான அபிவிருத்தி முறைகளுக்கு ஏற்பவே சீனாவின் சமாதான அபிவிருத்தி பாதை அமைந்துள்ளது. இன்றைய காலத்தில் உலகின் பல்முனை தன்மை, பொருளாதார உலக மயமாக்கல் மற்றும் சமூக தகவல் பரிமாற்றம் ஆகியவை அதிகரித்து வருகின்றன.

நாடுகள் மற்றொரு நாட்டுடன் சார்ந்திருத்தல் மற்றும் அக்கறைகளின் பேரில் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருத்தல் என்பவற்றை காண முடிகிறது. இவ்வாறான சூழலில் சமாதானத்தை தேடுதல் அபிவிருத்தி மற்றும் கூட்டு உறவு ஆகியவை காலத்தின் தேவையாக உள்ளன. வெவ்வேறு நாடுகளில் உள்ள மக்களின் பொதுவான அபிலாஷைகள் மற்றைய நாடுகளுடன் இணைந்து அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் பயன்படுத்த விழைவதாகும்.

எனவே, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீன அரசாங்கம் மற்றும் சீன மக்கள் ஆகியோர் தமது நாட்டின் அபிவிருத்தி சரித்திர நடைமுறைக்கு ஏற்ப அமைய வேண்டும் என்பதை அறிந்து கொண்டுள்ளனர். இதற்காக உலகின் ஏனைய நாடுகளுடன் சமாதான அபிவிருத்தியையும், பொதுவான அபிவிருத்தியையும் அத்துடன் சுபிட்சத்தையும் பேண வேண்டும் என்பது அவர்களின் விருப்பமாகும். பழைய முறைபபடி முதன்மைச் செல்வாக்கை பேணும் முறையை நாடுகள் மீண்டும் தொடரக் கூடாது. அதிகாரத்தை அதிகரித்துக் கொண்டால் அவ்வாறான ஒரு நிலை ஏற்படும் என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டுள் ளனர்.

சீனாவின் தரைத் தொடர்புடன் கூடிய 14 அண்டைய நாடுகளில் 5 தெற்காசியாவிலேயே உள்ளன. அத்துடன் இந்து சமுத்திரம் சீனாவுக்கு முக்கியமான தெற்காசியாவிலேயே உள்ளன. அத்துடன் இந்து சமுத்திரம் சீனாவுக்கு முக்கியமான ஆற்றலையும், பொருட்களை கொண்டு செல்லும் போக்குவரத்து பாதையாகவும் அமைந்துள்ளது. தெற்காசிய நாடுகளுடனான உறவுகளுக்கு சீனா மிகுந்த முக்கியத்துவத்தை வழங்குகிறது. அவற்றுடன் ஐக்கியமாக இணைந்து செயலாற்றவும் பரஸ்பர நன்மைகருதியும், இரு தரப்பு கூட்டுறவை பேணவும் சீனா கடமைப் பட்டுள்ளது. தெற்காசிய நாடுகளுடன் நட்புறவை பரிமாறிக் கொள்வதும், கூட்டு உறவுகளை பேணுவதும் பிராந்திய பாதுகாப்பையும் ஸ்திர நிலையைப் பேணவுமே அன்றி எந்த ஒரு மூன்றாம் தரப்பை இலக்கு வைத்து அல்ல

சீனாவின் தேசிய பாதுகாப்பு அதன் அரசியல் அமைப்பிலேயே உள்ளடக்கப்பட்டுள்ளது. நாட்டின் உயர்வு மற்றும் அபிவிருத்தி ஆகியவை இதன் கொள்கைத் தேவைகளாகும். சீனாவின் தேசிய பாதுகாப்பானது அதன் பொருளாதார அபிவிருத்திகளுடன் இணைந்து செல்கிறது. சீனாவின் தேசிய பாதுகாப்பானது அதன் சொந்த பாதுகாப்பை வலுப்படுத்தவும், பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படையிலும் சட்டபூர்வமான தேவையாகும்.

(7ம் பக்கம் பார்க்க)

# முதியோர் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் தயாரிக்க நடவடிக்கை

முதியோர் உரிமைகளுக்கான சர்வதேச சாசனமொன்றை வகுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்டுள்ள முனைப்புக்களுக்கு சார்க் வலய நாடுகள் சார்பாக யோசனைகளை முன்வைப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உலக நாடுகளில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது குறித்து ஐக்கிய நாடுகள் சபை தற்போது கவனம் செலுத்தியுள்ளதுடன் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலும் 2020ஆம் ஆண்டளவில் முதியோர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தைவிட அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார். எனினும் முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் 2000ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் சார்க் வயய நாடுகளுடன் இணைந்து முதியோர் உரிமைகள் குறித்த யோசனைகளை ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# அமெரிக்க நீதிமன்றம் நஷ்டஈடு வழங்க உத்தரவு ஜப்பான் நீதிமன்றம் தள்ளுபடி

## சாம்சூங் மீதான அப்பிளின் வழக்கு

தென்கொரியாவைச் சேர்ந்த சாம்சங் நிறுவனம் தனது தொழில்நுட்பத்தைத் திருடி மின்னணு சாதனங்களை உருவாக்குவதாக அமெரிக்காவின் அப்பிள் நிறுவனம் தொடர்ந்த வழக்கை ஜப்பான் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

தனது தொழில்நுட்பத்தைத் திருடி ஐபாட், ஐபேட் போன்ற சாதனங்களை சாம்சூங் நிறுவனம் தயாரிப்பதாக அப்பிள் நிறுவனம் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருத்து. இவ்வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றம் அப்பிள் நிறுவனத்தின் வாதத்தை ஏற்றதோடு அதற்கு நஷ்டஈடு வழங்குமாறு சாம்சூங்கிற்கு அண்மையில் உத்தரவிட்டது.

இதனிடையே, ஜப்பானின் டோக்கியோ மாவட்ட நீதிமன்றத்தில் சாம்சங் மீது அதே தொழில்நுட்பத் திருட்டு வழக்கை அப்பிள் தொடர்ந்திருந்தது. அதில், தான் காப்புரிமை பெற்றுள்ள தொழில்நுட்பத்தைத் திருடி, கேலக்சி ஸ்மார்ட்போன்களையும், டேப்லட் கணினிகளையும் சாம்சங் தயாரிப்பதாகவும் இதற்காக அந்நிறுவனம் தனக்கு ரூ.7 கோடி நஷ்ட ஈட்டை வழங்க உத்தரவிடுமாறும் அப்பிள் கோரியிருந்தது.

இவ்வழக்கை விசாரித்த டோக்கியோ நீதிமன்றம், வெள்ளிக்கிழமை அதைத் தள்ளுபடி செய்வதாக நீதிபதி டமோட் ஷோஜி தீர்ப்பளித்தார்.

# இந்திய மீனவர்கள் 28 பேர் விடுதலை

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த 28 இந்திய மீனவர்கள், நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடக பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டத்தின் அக்கரைப்பேட்டை பகுதியைச் சேர்ந்த குறித்த 28 மீனவர்களும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நான்கு இழுவைப் படகுகள் மூலம் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அருகி வரும் பாரம்பரிய சிறுவர் விளையாட்டுக்கள்



என்ன அன்னம் - சோத்தன்னம்
என்ன சோறு - பழஞ்சோறு
என்ன பழம் - வாழைப்பழம்
என்ன வாழை - திரி வாழை
என்ன திரி - விளக்குத்திரி
என்ன விளக்கு - குத்துவிளக்கு
என்ன குத்து - இந்தக்குத்து----

இது தமிழில் வழங்கும் சிறுவர் விளையாட்டுக்கான பாடலொன்று தமிழர் பாரம்பரியத்திற்கே உரிய சிறுவர் விளையாட்டுக்கள் இன்று அருகி வருகிறது.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு,
ஆனையாடுவான் தம்பி.
வாழைக்கு தண்ணி, பசும்புலியும் கிட்டிபுள்ளு

விளையாட்டு போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களால் சிறுவர் உடல் நலன் வளர்சிசியடைவதோடு சமுக கூட்டுணர்வும் ஏற்படுகின்றது.

இன்று சிறுவர்கள் தனியறையில் அடைந்து கணணியுடன் விளையாடுகிறார்கள். இது அவர்கள் உடல் உள நலனைப் பாதிக்கிறது என்கின்றன. மருத்துவ அறிக்கைகள் திறந்த வெளிகளில் பலர் சேர்ந்து விளையாடும் எமது பாரம்பரிய விளையாட்டுக்கள் அழிந்து விடாது மீட்டெடுப்பது இன்றய காலத்தின் தேவையாகிறது.

சனசமுக நிலையங்கள் விளையாட்டுக்கழகங்கள் என்பன பாரம்பரிய விளையாட்டு போட்டிகளை நடாத்தி ஊக்குவிக்க வேண்டும்.

க.சோதிதாசன்.

# சீனாவின் தேசிய பாதுகாப்பு வேலைகள்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவின் பாதுகாப்புச் செலவீனமானது 2010, 2011 களில் அதன் மொத்த உள்ளூர் உற்பத்தியின் 1.4 வீதம் மற்றும் 1.28 சதவீதமாகும். ஒருசில அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை பொறுத்தவரை சீனாவின் பாதுகாப்பு செலவீனம் மிகவும் குறைந்ததாகும். சீனா அதன் இராணுவ தந்திரோபாயத்தின் அடிப்படைத்துவம் மற்றவர்களை வெறுப்பூட்டுவது அல்ல, தனது தற்பாதுகாப்பு நிலையை பேணுவதாகும். இந்த முறையில் தன் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் மட்டுமே சீனா தாக்குதல் நடத்தும். ஹுவாங்குவான் தீவு தொடர்பான சம்பவம் இதற்கு ஒரு உதாரணமாகும்.

சீனா, பிலிப்பைன்ஸைவிட இராணுவ வலிமை மிகுந்திருந்த போதும் அச்சுறுத்தலையோ, பலவந்தத்தையோ பிரயோகிக்கவில்லை. சீனா பாதுகாப்பிலும் அணு தந்திரோபாயத்தை பின்பற்றுகின்றது. எந்த ஒரு நிலையிலும், எந்த ஒரு நேரத்திலும் அணு ஆயுதங்களை முதலில் பிரயோகிக்கும் கொள்கை சீனாவிடம் இல்லை என்றார்.

சீனா அதன் இராணுவத்தின் தரத்தினை தகவல் பரிமாற்றத்தின் மூலம் மேம்படுத்துவதை கொள்கையாக கொண்டுள்ளது. தற்போதைய நிலையில் சர்வதேச இராணுவ போட்டித் தன்மை மிகவும் உக்கிரமாக உள்ளது. உலகளாவிய ரீதியில் இராணுவ அலுவல்களின் புரட்சித் தன்மை புதிய பரிமாணத்தை எட்டியுள்ளது.

உலக சமாதானத்தையும், ஸ்திரத்தன்மையையும் பேணுவதில் சீனா உறுதியாக உள்ளது. இதன்படி ஐ.நா. அமைதி காக்கும் படையின் 30 பணிகளில் 21 ஆயிரம் சீன வீரர்கள் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது. ஐ.நா. பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் அதிக ஆளணி பங்களிப்பு இதுவாகும். இவ்வாறு சீனப் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.



# கழுகுக் கண்கள்

நாட்டின் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு இலஞ்ச ஊழலே அடித்தளம் அமைக்கின்றது. எனவே, இலஞ்சம் கொடுப்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் எதிராக இந்தக் கழுகுக் கண்கள் தீவிர நடவடிக்கை எடுப்பது என்று முடிவு எடுத்துள்ளது.

பொது இடங்களில் புகைத்தல் மற்றும் பொது இடங்களில் மது அருந்துதல் வாகனத்தை நிறுத்தி வைத்துக்கொண்டு வாகனங்களுக்குள் இருந்து வீதிகளில் மது அருந்துதல் போன்றவற்றை பொலிஸார் முற்றாக தடை செய்துள்ளனர். ஆயினும் இதனை இது வரையில் நூற்றுக்கு நூறு வீதம் சரியான முறையில் அமுலாக்கத் தவறி வருகின்றனர்.

இதனால் கொழும்பிலும் நாட்டின் ஏனைய நகரங்களிலும் மக்கள் நடமாட்டம் குறைந்த இடங்களில் வாகனங்களில் செல்பவர்கள் வாகனங்களை நிறுத்தி மது அருந்தி ஆடிப்பாடும் சம்பவங்கள் இப்போது கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதனால் பொது இடங்களில் மது அருந்தியவர்கள் தள்ளாடிக் கொண்டிருப்பதும் அப்பாதையில் செல்லும் பெண்களை நையாண்டி செய்து துன்புறுத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

பெண்களை மது போதையில் உள்ளவர்கள் நையாண்டி செய்து துன்புறுத்துவதனால் கடந்த காலத்தில் எத்தனையோ இரு குழுக்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்பட்டு பலர் காயமும் அடைந்துள்ளார்கள். இந்த ஒழுக்கக் கேடான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவை பிறப்பிப்பது அவசியமாகும்.

இவற்றுடன் பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்பதை ஒரு கடுமையான குற்றமாக பொலிஸார் கருதுகிறார்கள். இத்துடன் பதினெட்டு வயதுக்குக் குறைந்த இளைஞர்கள் மட்டுமன்றி விடலைப் பருவத்தில் உள்ள பெண்களும் கூட பொது இடங்களில் சிகரெட் புகைக்கிறார்கள். அவர்களையும் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் இருக்கின்ற போதிலும் அவர்கள் அதற்கு பதில் வெறுமனே சம்பந்தப்பட்டவர்களை எச்சரித்து விடுவித்து விடுகிறார்கள்.

பாடசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள் அருகில் மது விற்பனை செய்வது சட்டப்படி தடைசெய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தடையுத்தரவை பெரிய கம்பனிகள் நடத்தும் சுப்பர் மார்கெட்டுக்கள் இப்போது சரியான முறையில் கடைப்பிடிக்கின்றனர். அத்துடன் இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் சுப்பர் மார்கெட்டுக்களில் மது விற்பனை செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆயினும், அரசியல் மற்றும் பணப் பலத்தை பயன்படுத்தி சில முதலாளிமார் பாடசாலைகளுக்கு அருகிலும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகிலும் பல தில்லு முல்லுகளைச் செய்து சாராயக் கடைகளைத் தொடர்ந்தும் திறந்த வண்ணம் இருக்கிறார்கள். இது விடயம் குறித்து கலால் திணைக்களத்தின் அதிகாரிகளோ, பொலிஸாரோ அந்தளவுக்கு கவனம் செலுத்தவில்லை என்று அப்பிரதேசங்களைச் சேர்ந்த சமூக, சமயத் தலைவர்கள் வேதனை தெரிவித்து வருகிறார்கள்.

போயா தினங்களில் இறைச்சிக் கடைகளை மூட வேண்டும், மது சாலைகளை மூட வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் இன்று இறைச்சிக் கடைகளைப் பொறுத்தமட்டில் நூற்றுக்கு நூறு வீதம் சரியான முறையில் அமுலாக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் போயா தினங்களில் மதுக் கடைகள் மூடியிருந்தாலும் அவற்றுக்கு வெளியில் வாகனங்களிலும், அருகில் உள்ள கட்டடங்களில் வைத்தும் மதுப் போத்தல்கள் விற்பனை விலையை விட சற்று அதிக விலைக்கு இரகசியமான முறையில் விற்கப்படுவதாகவும் பொது மக்கள் புகார் செய்கிறார்கள்.

சாதாரண தினங்களில் விற்பனை செய்யப்படும் மதுப் போத்தல்களின் எண்ணிக்கையை விட போயா தினங்களில் கூடுதலாக இவை விற்பனை செய்யப்படுவதாகவும், மக்கள் முறைப்பாடு செய்கிறார்கள். போயா தினங்களில் மதுபானம் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதற்கு ஒரு வகையில் பொலிஸாரும் இன்னொரு வகையில் கலால் திணைக்களத்தின் அதிகாரிகளும் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

அரசாங்கம் எவ்வளவுதான் சட்டங்களை நிறைவேற்றினாலும் அதனை சரியான முறையில் அமுலாக்குவதற்கு இருக்கும் அரச அதிகாரிகள் அந்த சட்டங்களை நிறைவேற்றத் தவறுதல் அல்லது அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பதனால்தான் இந்த வேதனைக்குரிய நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் இலஞ்ச அரக்கனே பின்னணியில் இருந்து விஸ்வரூபம் எடுத்து செயற்படுகிறான். நாட்டில் அமைதியான சட்டத்தையும். ஒழுங்கையும் மதித்து நடக்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமாயின் நாம் முதலில் இலஞ்சத்தை முழுமையாக ஒழித்துக்கட்ட வேண்டும். இது விடயத்தில் நாம் தவறினால் நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்டுவது கடினமான காரியமாக இருக்கும்.

இது விடயத்தில் கழுகுக் கண்கள் தொடர்ந்தும் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ளும்.

# யுத்தம் ஓய்ந்ததையடுத்து புத்துயிர் பெற்றெழும் சுற்றுலாத் துறை



இந்நாட்டின் முன்னேற்றத்தைத் தடைசெய்து மக்களை அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்ற யுத்தம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஒருவருட பூர்த்தியை யும் அடைந்துவிட்டது. நாட்டின் மக்களுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் சவாலாக விளங்கிய யுத்தம் முடிவடைந்த மையின் பயனாக இன்று எவரும் எந்தவொரு இடத்துக்கும் சென்றுவரக் கூடிய அச்சமற்ற நாடாக எமது நாடு திகழ்கின்றது.

யுத்தத்தின் முடிவின் பலனாக எமது நாட்டின் சுற்றுலாத் துறை, கைத்தொழிலுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய யுத்த மேகமும் கலைந்து விட்டது. இதன் பயனாக இன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பார்வை எமது நாட்டின் மீது விழுந்துள்ளது. யுத்தத்தின் பின்னர் மிகவும் வேகமாக சுற்றுலாக் கைத்தொழில் சுபீட்சப் பாதையை நோக்கி பயணிக்க ஆரம்பமாகிவிட்டது.

சுற்றுலாத்துத் துறை கைத்தொழில் மூலமாக நாட்டுக்கு பெரும் வருமானம் கிடைக்கின்றது. எமது நாட்டில் இன்று உள்ள கைத்தொழில்களில் சுற்றுலாத் துறை மிகப் பெரும் கைத்தொழிலாகும். எமது மூதாதையர்களினால் பாதுகாத்து வழங்கப்பட்ட இயற்கை சொத்துக்களும், வரலாற்றுப் புகழ்மிக்க புராதன இடங்களுமே இக்கைத்தொழிலின் மூலதனமாக இன்று விளக்குகின்றன.

எமது நாட்டின் அரசியல் வரலாற்றுடன் இணைந்த நினைவுச் சின்னங்களாக விளங்கும் பழைய காலத்து மன்னர்களின் கோட்டைகள், அதன் இடிபாடுகள், சிற்பங்கள், கல் ஓவியங்கள், நீர் வீழ்ச்சிகள், அடர்ந்த காடுகள், தாவரவியல் பூங்காக்கள், மிருகக் காட்சி சாலைகள், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள் காலத்து கட்டடங்கள் இத்துறைக்கு பெரும் பங்களிப்பை பழங்குகின்றன.

கண்டி தலதா மாளிகை, அதன் வருடாந்த பெரஹரா, கதிர்காமம் ஆலய தீமிதிப்பு வைபவ்ம், திருகோணமலை ஆலயம், ஆகிய மதம் சார்ந்த வைபவங்களும், யால, வில்பத்து, வஸ்கமுவ, குமண போன்ற பிரதேசங்களும், மயில், மான், யானை, பறவைகள் உட்பட பல்வேறு வகைப்பட்ட வனஜீவராசிகளும், தூபிகள், மற்றும் சிகிரியா, ஹிக்கடுவ கடலின் கீழ் காணப்படும் பவள மலைகள், இப்பூமியின் பத்தில் ஒன்பது நிலப் பரப்பிலிருந்து பெறப்படும் மாணிக்கக் கற்களும் இக்கைத்தொழிலில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எமது நாட்டைச் சுற்றியுள்ள கடலின் கரைப் பகுதியில் நான்கில் மூன்று பகுதி வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் மனதை கொள்ளை கொண்டுள்ளது.

இன்று சுற்றுலாத் துறையும், அதனைச் சார்ந்த உல்லாசப் பயணிகள் அதிகார சபையும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதன் காரணமாக இக் கைத்தொழில் மிகத் துரிதமாக வளர்ச்சி பெற்று வருகிறது. அதன் காரணமாக சுற்றுலாத்துறை மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தற்போது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தென், கிழக்கு ஆசிய நாடுகள், இந்தியா, ரஷ்யா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் பிரதான சந்தையாக இலங்கை விளங்குகின்றது.

இலங்கையில் சுற்றுலாப் பயணிகளுக்கு பொருத்தமான சூழலை ஏற்படுத்தும் போது சுற்றாடலை மாசுப்படுத்தக்கூடிய செயல்களையும் தடைசெய்தல் அவசியமாகும். பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்து அதற்குப் பதிலாக மக்களுக்கும், உல்லாசப் பயணிகளுக்கும் ஊறு விளைவிக்காத வகையிலான பைகளை சிறு கைத் தொழில் அமைச்சின் மூலமாக அறிமுகப்படுத்த வேண்டும்.

போத்தல் கண்ணாடித் துண்டுகள், கடதாசி மற்றும் அட்டைப் பெட்டிகள் சுற்றாடலை பாதிக்கக் கூடியன. மக்கள் இவற்றை வீதிகளில் வீசி மாசுபடுத்து கின்றனர். இவ்வாறான நிலைமை தொடராத வகையில் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் அவசியமாகும். இவ்வாறான சவால்களை வெற்றிகொள்ள நாட்டின் அனைத்து மக்களும் சுற்றுலாத் துறை அபிவிருத்தி திட்டத்தோடு கைகோர்த்தல் அவசியமாகும்.

அன்று யுத்தத்தின் காரணமாக முழு நாட்டு மக்களுக்குமாக மூடப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த சுற்றுலா மையங்கள் இன்று யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை காரணமாக மக்களால் நிரம்பி வழிகின்றன. பாசிக்குடா கடற்கரையில் வார இறுதி தினங்களில் பத்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்ளூர் உல்லாசப் பயணிகள் ஒன்று கூடுகின்றனர்.

பாசிக்குடா, குச்சவெளி, உப்புவெளி கடல் பிரதேசங்களைச் சேர்ந்த விடுதிகளும் மற்றும் கற்பிட்டி தீவகப் பகுதியைச் சேர்ந்த சுற்றுலாத்துறைக்கு ஏற்ற இடங்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் செயல்படும் சுற்றுலாத் துறை துரிதமாக அபிவிருத்தி அடைந்து வரும்





வேளையில் எதிர்வரும் வருடங்களில் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவார்கள்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சுற்றுலாத்துறையை மேலும் அபிவிருத்தி செய்வதோடு உல்லாசப் பயணிகளின் நன்மை கருதி வசதிகளைக் கட்டியெழுப்புகிறது.

[illegible]ன் காரணமாக பல ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இத்திட்டத்தின் கீழ் தனியார் வீடுகளில் நல்ல சுற்றாடலைப் பேணும் போது வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு அறைகளை வாடகைக்கு வழங்கக்கூடிய சந்தர்ப்பம். கிடைக்கின்றது. இதன் போது பாரிய வருமானம் தனியாருக்கு கிடைக்கப் பெறுவதோடு பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்கக் கூடிய அரியதோர் சந்தர்ப்பமும் கிடைக்கின்றது.

தனியார் வீட்டு உரிமையாளர்கள் இவ்வாறான ஒரு தனியார் துறை அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்ள நினைத்தால் சுற்றுலாத்துறை அபிவிருத்தி சபையின் வர்த்தகப் பிரிவோடு தொடர்புகொண்டு அதற்குத் தேவையான உதவி-களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எமது நாட்டில் சுற்றுலாத்துறை மேலும் சுபீட்சம் பெறுகையில் ஆயிரக் கணக்கானோருக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது. அனைத்து வசதிகளையும் கொண்ட உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல்கள் எமதுநாட்டின் பல பாகங்களிலும் உள்ளன. இந்த ஹோட்டல்கள் அனைத்தும் உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான சகல தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய உட்கட்டமைப்பையும் நவீன வசதிகளையும் கொண்டதாக உள்ளன.

இந்த ஹோட்டல்கள் திடீரென அரச சுகாதார, மற்றும் சுற்றுலாத் துறை அபிவிருத்தி சபையின் அதிகாரிகளாலும் சுற்றி வளைக்கப்பட்டு சுகாதாரம், மற்றும் [illegible]கர உள் அமைப்புக்கள் அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் [illegible]ல்படுத்தப்படுகின்றதா என பரிசீலனை செய்யப்பட்டு வருவது கு[illegible]யிடத்தக்கதாகும். தவறாக காணப்படுகையில் அவர்களின் அனுமதிப் பத்திரம் ர[illegible] செய்யப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுகின்றனர்.

எமது நாட்டு சுற்றுலாத்துறை கணிசமான, கவர்ச்சிமிக்க பன்மைத்துவம் நம்பகத்தன்மை மிக்க அங்கங்களால் இன்று கூடிய பயனைப் பெற்று வருகிறது.

வெளிநாட்டு நாயண மாற்று சம்பாத்தியங்களுக்கான மார்க்கங்களிடையே சுற்றுலாத்துறையானது இன்று நான்காவது இடத்தில் உள்ளது. 42,000 மில்லியன் 'ரூபாவிற்கும் அதிகமான அந்நிய செலாவணியை வருடாந்தம் பெற்றுத் தருகிறது. இரண்டு மில்லியன்களுக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்கள் சுற்றுலாத் துறை மூலமாக கிடைக்கின்றது.

சுற்றுலாக் கைத்தொழிலை மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கினூடாக முன்னெடுத்துச் செல்வதற்கு கல்வி நிறுவனங்களின் தேவை அவசியமாகின்றது. கல்வி நிறுவனங்களின் மூலமாக சுற்றுலாத் துறை பாட நெறியை அறிமுகப்படுத்தி இக் கைத்தொழில் துறைக்குள் ஆயிரக் கணக்கான இளைஞர்களை உட்புகுத்தி தொழில் வழங்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எமது நாட்டின் அறிவு சார் சொத்துரிமைகளும், முன்னோரின் ஆற்றல்மிக்க சேமிப்புகளுமான மதத் தலங்கள், தூபிகள், நகரங்களில் காணப்படும் பழங்காலத்து கட்டடங்கள், மலைகள், நதிகள், கல் ஓவியங்கள், சிலைகள், மரவேலைப்பாடுகள், என அனைத்தையும் காண்பிப்பதில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வழிகாட்டிகள் மும்முரமாக ஈடுபடல் வேண்டும். எமது வழிகாட்டிகளுக்கு பல மொழி புலமை அவசியமான தாகும். தமிழ், ஆங்கிலம், சிங்களம் தவிர்ந்த ஏனைய பிரெஞ்ச், டச், ஹிந்தி, கிரேக், ஜெர்மன் உட்பட பல மொழிகளில் பேசக்கூடிய ஆற்றல் வேண்டும்.

பாரம்பரிய வாசனைத் திரவியங்கள், மற்றும் மூலிகைகள் மூலமாக தயாரிக்கப்படும் பான வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். இதன் மூலமாக கிராமப்புறத்து மக்கள் பெரும் வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பு உள்ளது.

சுற்றுலாத் துறைக் கைத்தொழிலுக்கு மறைமுகமான சவால்களும் உள்ளன. உல்லாசப் பயணிகளுக்கு பாலியல் ரீதியான தொந்தரவு, தனிமையில் இருக்கும் சுற்றுலாப் பயணி களவு, கொள்ளைகளுக்கு முகம் கொடுத்தல், ஏமாற்றுதல், சூழ்ச்சி (அதியுயர் பயணக் கட்டணத்தை அறவிடல், பொருளுக்கான விலையைக் கூட்டி விற்றல்) இலங்கையின் எழிலை இரசிக்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு விளைவித்தல், அனுமதியற்ற வழிகாட்டல், பொய்யான தகவல்களை வழங்குதல், இலங்கையின் புகழ்ச்சிக்கு பங்கம் விளைவித்தல், பலவந்தமாக பொருட்களை விற்க முற்படல், முச்சக்கர சாரதிகள் போன்றோர் தகாத பயணங்களை மேற்கொள்ள வற்புறுத்தல், சுற்றுலாப் பயணி விருப்பங் கொள்ளாத போது வழிகாட்டுதலுக்கு தன்னிச்சையாக முன்வருதல், பலவந்தமாக பணம் கேட்டு மிரட்டல் போன்ற பல சவால்களுக்கு உல்லாசப் பயணிகள் முகங்கொடுப்பது முண்டு.


சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாப்பது எமது கடமை என எண்ணுகியர்களா?

அவ்வாறாயின் அவர்கள் சிரமத்தில் சிக்கும் போது அவசர அழைப்பு 1912 இற்கு அறிவியுங்கள். அல்லது 011- 2421052, 011-2421054, 011-2421070 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பொலிஸ் சுற்றுலாப் பயணிகள் பிரிவுக்கு தகவல்களை வழங்கலாம்.

அதேவேளை உல்லாசப் பயணிகள் சிறுவர் துஷ்பிரயோகம், மதங்களை அவமதித்தல், (உதாரணம் மத தலங்களில் உள்ள தெய்வ சிலைகளை அவமதிக்கும் வகையில் படம் எடுத்தல், நடந்துகொள்ளல்) பாரம்பரிய வாசனைத் திரவியங்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்ய முயலுதல், போதைப் பொருள் பாவித்தல் போன்ற நடவடிக்கைகளையும் மேல்காணும் தொலைபேசி எண்கள் மூலமாக பொலிஸ் சுற்றுலாப் பயணிகள் பிரிவுக்குத் தகவல்களை வழங்கலாம்.

சுற்றுலாக் கைத்தொழிலுக்கு இருந்த தடை இன்று நீக்கப்பட்டு விட்டது. பயங்கரவாத யுத்தத்தி னால் முப்பது வருடமாக சிக்கித் தவித்த சுற்றுலாக் கைத்தொழில் இன்று எதிர்கால ஆச்சரியங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் புத்துயிர் பெற்றுவிட்டது. வருங்காலத்தில் அசையாத பெரும் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் தொழிலாக சுற்றுலாக் கைத்தொழில் விளங்கப் போகிறது.

சுற்றுலாக் கைத்தொழிலில் ஒரு வளர்ந்த இலங்கையைக் காண இத்துறையின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் நமக்கும் ஒரு பங்கு இருப்பதை உணருவோமாக!



# ஸ்ரீல.மு.கா. வெற்றி பெற்றால் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும்

- இரா.சம்பந்தன் எம்.பி

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாகத் தெரிவு செய்யப்பட்டால் அக்கட்சி ஆட்சி அமைப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் ஆதரவளிக்கும். அதுபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப்பெரும் கட்சியாக வெற்றியீட்டினால் அது ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு அளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



பெருந்தன்மையாக தாராளமாக விட்டுக்கொடுத்து முஸ்லிம் மக்களுடன் செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தயாராக இருக்கின்றது என்றும் சம்பந்தன் கூறினார்.

திருகோணமலைக்கு வடக்கே உள்ள புல்மோட்டை என்ற முஸ்லிம் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்திலிருந்து போட்டியிடும் புல்மோட்டையைச் சேர்ந்த சின்ன மரைக்கார் பளீல் மற்றும் முதன்மை வேட்பாளர் சி.தண்டாயுதபாணி ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:-

"புல்மோட்டை என்ற பெயரை கனிஜபுர என்று ஜெயவர்த்தனா அரசாங்கம் மாற்றியபோது அதனை எதிர்த்து ஜெயவர்த்தனாவிடம் முறையிட்டேன். அதனை அடுத்து கனிஜபுர என்ற பெயர்ப்பலகை அகற்றப்பட்டது. அதுபோன்று திருகோணமலை நிர்வாக மாட்டத்தின் கீழ் இருந்த புல்மோட்டையை அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தின் கீழ் கொண்டு வந்தபோது நான் அதனை எதிர்த்தேன். அதனைத் தொடர்ந்து புல்மோட்டை மீண்டும் திருகோணமலை நிர்வாக மாவட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

புல்மோட்டை முஸ்லிம் மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு உரித்து உண்டு. புல்மோட்டை முஸ்லிம் மக்கள் எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் வாக்களிக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முன்னுரிமை கொடுத்து வாக்களிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனிப்பெரும் கட்சியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து அதற்கு ஆதரவளித்து ஆட்சி அமைக்க உதவும்படி முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக தெரிவு செய்யப்பட்டால் அது ஆட்சி அமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் உதவும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையேயான உறவு மிகவும் நெருக்கமாக வளரவேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையில் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணுவதற்கான சந்தர்ப்பம் உருவாகிவருகின்ற போது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பிரிந்து நின்று செயல்பட முடியாது. இரு இனங்களும் ஒற்றுமையாக உறுதியுடன் செயற்பட்டு எதிர்வரும் தேர்தலில் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்'' என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

# தமிழகத்தில் செந்தூரனின் உண்ணாவிரதம் தொடர்கிறது

தமிழகத்தின் செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு அகதிகள் முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இலங்கைத் தமிழர்களை திறந்தவெளி முகாம்களுக்கு மாற்றக்கோரி இலங்கையரான செந்தூரன் முருகனின் உண்ணா விரதப் போராட்டம் 27ஆவது நாளாக நேற்றும் தொடர்கிறது.

இந்நிலையில், அவருக்கு ஆதரவு தெரிவித்து மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் சென்னை, எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகத்தில் உண்ணாவிரத போரட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் உண்ணா விரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட வைகோ உரையாற்றுகையில்,

"செந்தூரன் முருகனின் கோரிக்கையை நிறைவேறும் வரை, மதிமுகவின் போராட்டமும் தொடரும்'' என்று குறிப்பிட்டார். இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் செந்தூரனின் உயிரை காப்பாற்றவும், சிறப்பு முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களை திறந்தவெளி முகாமுக்கு மாற்ற வேண்டும் என்ற அவரது நியாயமான கோரிக்கையை வலியுறுத்தியும், கடந்த 27ஆம் திகதி முதல் மதிமுக தரப்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்று வருகிறது.

உலகில் வேறெந்த நாடுகளுக்கு இலங்கைத் தமிழர்கள் சென்றாலும் அடைக்கலம் கொடுக்கின்றனர்.

ஆனால் சொந்த நாடான தமிழகத்திற்கு வரும் இலங்கைத் தமிழர்கள் அகதிகள் என்ற பெயரில் முகாம்களில் அடைக்கப்படுகின்றனர்.

பொய் வழக்குகளை போட்டு இலங்கை அகதிகளை கைது செய்கின்றனர்.

இதேபோல செங்கல்பட்டு முகாமில் இருந்த செந்தூரன் மீது அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றதாக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு கேரளாவில் கைது செய்யப்பட்டார். பிணை யில் வெளியே வந்த அவரை, தற்போது செங்கல்பட்டு சிறப்பு அகதிகள் முகாமில் அடைத்து வைத்துள்ளனர்.

அரசு மருத்துவர்கள் இருவர் மூலம் செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு முகாம்களில் அடைக்கப் பட்டவர்களை பரிசோதனை செய்ததில், 23பேருக்கு மனஅழுத்தம் இருப்பதாக தெரியவந்துள்ளது. இது குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ள நிலையிலும், எந்த செய்தியும் வெளியே வரவில்லை.

செந்தூரன் 27 நாட்களாக உண்ணாவிரத்தை தொடர்ந்து வருகிறார். இதில் 12 நாட்கள் தண்ணீர் கூட குடிக்காமல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இதனால் அவரது உடல்நிலை எப்போது வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம். எனவே செந்தூரனின் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை மதிமுகவின் போராட்டம் தொடரும் என்றார்.

# யாழ். மக்களின் மேம்பாட்டுக்காக நாம் இணக்கப்பாட்டு அரசியலைத் தொடர்வோம்

- சந்திரகுமார் எம்.பி.

(வட்டக்கச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மக்களின் மேம் பாட்டில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றார். பலரின் அவதூறுமிக்க பொய் பரப்புரை களுக்கு மத்தியிலும் அவரது அர்ப்பணிப்பு மிக்க தொடர் உழைப்பே இன்று யாழ்.மாவட்ட த்தை நிமிர வைத்துள்ளது என ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பி னரும், பாராளுமன்றக் குழுக்க ளின் பிரதித்தலைவருமான முரு கேசு சந்திரகுமார் தெரிவித்து ள்ளார்.

தென்மராட்சி கெற்பேலியில் மின் இணைப்பை ஏற்படுத்தி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த காலங்களில் மின் இணைப்பை பெறாத பகுதிகளும் இன்று மின்சாரத்தினை பெற்றுள்ளன.

யுத்தத்திற்குப் பின் யாழ்.மாவட்டம் இன்று அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. மக்களது வாழ்வியல் பொருளாதாரம் உட்கட்டுமானம் போன்ற செயற்பாடுகள் இதன் பிரதிபலிப்பை சான்றுபடுத்துகின்றன.

ஆனால் சிலர் இதை மறைக்கின்றனர், ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை பெற்றநாள் தொடக்கம் அவரது தலைமையில் இம் மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மேம்பாடும் எட்டப்பட்டுள்ளன. மக்களின் மேம்பாடு கருதி நாம் முன்னெடுத்துவரும் இவ் இணக்கப்பாடடுடனான அரசியல் மற்றும் மேம்பாட்டு செயற்பாடுகளை தொ டர்ந்தும் முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம்.

எம் மக்கள் அனை த்துத் துறைகளிலும் முன்னேற் றத்தை எட்டும்வரை எமது செயற் பாடுகள் தொடரும் அதற்காக முழு அர்ப்பணிப்புடனும் நாம் செயற்படத் தயாராகவுள்ளோம் என்றார்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். மாநகரசபையில் தீர்மானம்

நீண்ட காலமாக விசாரணைகள் இன்றி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி யாழ் மாநாகர சபையின் எட்டாவது பொதுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

நீண்ட காலமாக தங்களுடைய உறவுகளைப் பிரிந்து சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களின் விடுதலையினை விரைவுபடுத்துமாறு வலியுறுத்திய பிரேரணை ஒன்றினை ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன் ஏட்டாவது மாநகர சபையின் கூட்டத் தொடரின் போது கொண்டு வந்தார்.

அந்தப் பிரேரணையில், கடந்த ஜூன் மாதம் சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்த சிறைச்சாலை ஆணையாளர் குலதிங்க, சிறைக் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து விடுதலை செய்யப் போவதாகவும், விடுதலை பெற விரும்பும் கைதிகள் கடிதம் மூலம் தமது விருப்பத்தினை தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் கூறியிருந்தார்.

அதற்கிணங்க தான் உட்பட பல தமிழ் அரசியல் கைதிகள் கடிதம் எழுதியிருப்பதாகவும் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சிறைச்சாலை அமைச்சர் கூறியதற்கமைய அரசாங்கம் கைதிகளின் விடுதலை தொடர்பான நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும் எனவும், தமிழ் அரசில் கைதிகளில் தானும் ஒருவன் என்ற நிலையில் சபையினூடாக இந்த பிரேரணையை முன்வைக்கிறேன் என்றும் அந்தப் பிரேரணையில் கோமகன் கூறியுள்ளார்.

மேலும், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் யாழ்.மாநகரசபையைப் பின்பற்றி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

# கொக்குவில் சந்தியில் இரு இளைஞர் குழுக்கள் மோதல்

வலிகாமம்

கொக்குவில் சந்தியில் இடம் பெற்ற இரு இளைஞர் குழுக்களுக்கு இடையெயான சண்டையில் ஒருவாட் படுகாயங்களுக்க உள்ளாகியுள்ளதுடன் நால்வர் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

கொக்குவில் சந்தியில் சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றது.

கொக்குவில் சந்தியில் நின்ற இளைஞர் குழுவுக்கும் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழுவுக்கும் இடையே இந்த சண்டை இடம் பெற்றது.

சண்டை இடம் பெறுவதை அவதானித்த கொக்குவில் சந்தியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் குறிப்பிட்ட இடத்திற்க்க விரைந்ததைத் தொடர்ந்து மோட்டார் சையிக்கிள்களில் வந்த இளைஞர் குழுவினர் தப்பி ஓடும் போது தாம் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைவிட்டுச்சென்றுள்ளார்கள்.

# மறவன்புலோ வடக்கில் வீதி புனரமைப்பு தாமதம்

மறவன்புலோ

மறவன்புலோ வடக்கு கிராமத்திற்கான பிரதான வீதியை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் நேரில்பார்வையிட்டார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 5 கிலோமீற்றர் நீளமுடைய இப்பிரதான வீதி புனரமைப்பிற்கென 49 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு ஒன்றரை வருட காலத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரையில் ஒப்பந்தகாரர்களினால் எதுவிதமான வீதிப்புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதேவேளை, வீதி அபிவிருத்திக்கான பணிகள் ஆரம்பிக்கப்படாமை தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை எதுவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்க வில்லையெனவும், தற்போது பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில் தமது கிராமத்திற்கான பிரதான வீதியை திருத்தி தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் உதயனில் அப்பிர தேச மக்களும், பொதுஅமைப்புக்களும் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக இன்றைய தினம் இவ்வீதியினை நேரில் சென்று பார்வையிட்டதுடன், மேற்படி வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

# தமிழகத்தில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகள் திருப்பி அனுப்பப்படுவர்

- ஜி.கே. வாசன்

வெலிங்டன் இராணுவ மையத்தில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப வேண்டுமென்று அனைத்துக் கட்சி தலைவர்களும் வற்புறுத்தி வருகிறார்கள். மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக போராட்டங்களும் நடந்து வருகின்றன.

இலங்கை இராணுவ அதிகாரிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று மத்திய மந்திரி நாராயணசாமி கூறியுள்ளார். இந்த நிலையில் மத்திய கப்பல் துறை மந்திரி ஜி.கே. வாசன் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

தமிழ்நாட்டில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை விரைவில் திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இனி இது போல் நடைபெறாமல் இருக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

மத்திய இராணுவ மந்திரியை டெல்லியில் சந்தித்து இதுகுறித்து விளக்கமாக எடுத்துக் கூறுவோம்.

இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்பதில் தமிழக காங்கிரசும் உறுதியாக உள்ளது என்றார்.

# தண்ணீரில் கைத்தொலைபேசி விழுந்தால்

நாம் கைத்தொலைபேசியை குளியலறைக்கும் எடுத்துச் செல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறோம். அப்போது சில வேளைகளில் கைத்தொலைபேசி தண்ணீரில் விழுந்துவிடலாம். அவ்வாறு தவறு நேர்ந்தால் கடைப்பிடிக்க வேண்டியவை:

1. முதலாவதாக போனில் எதனை எல்லாம் பிரித்து எடுத்து வைக்க முடியுமோ அவற்றை எல்லாம் பிரித்து எடுத்திடவும். கைத்தொலைபேசி கவர், பற்றரி கவர், பற்றரி, சிம் கார்ட், மெமரி கார்ட் ஆகியவை இதில் அடங்கும்.

2. அடுத்து கைத்தொலைபேசியில் எங்கெல்லாம் தண்ணீர் இருக்கும் என்று எண்ணு கிறீர்களோ அங்கு சிறிய மெல்லிய துணி அல்லது ரிஸ்ஸு கடதாசி கொண்டு சுத்தம் செய்து நீரை உறிஞ்சி எடுக்கவும். முழுவதுமாக உலர செய்திடவும்.

3. முடி உலர்த்தி ஒன்று இருந்தால் அதனாலும் கைத்தொலைபேசியின் ஈரத்தை உலர்த்தலாம். குறிப்பாக பற்றரி வைத்திடும் இடத்திலுள்ள ஈரத்தை முழுமையாக நீக்கவும்.

இவ்வாறு உலரவைக்கையில் முடி உலர்த்தியை கைத்தொலைபேசிக்கு மிக அருகே கொண்டு செல்லக் கூடாது. அது சில பகுதிகளைப் பாதிக்கலாம். எனவே சற்று தள்ளி வைத்து 20 - 30 நிமிடம் வரை உலர வைக்கும் வேலையை செய்ய வேண்டும்.

இந்த வேலையை செய்யும்போது கைத்தொலைபேசியை வெவ்வேறு நிலைகளில் வைத்து உலர வைக்கவும். இதனால் வெவ்வேறு இடங்களில் ஒட்டியிருக்கும் ஈரம் வெளியேறி உலரும். இதேபோல் பற்றரி, சிம் கார்ட் ஆகியவற்றிலுள்ள ஈரத்தையும் உலர வைக்கவும்.

நன்றாக உலர்ந்த பின்னர் காற்றோட்டமான இடத்தில் வெகுநேரம் வைத்த பின்னர் பற்றரி, சிம் ஆகியவற்றைப் பொருத்தி இயக்கவும். அப்போதும் சரியாக இயங்கவில்லை எனில் இன்னும் சில மணி நேரம் காத்திருந்து ஈரம் தானாக உலரும் வரை பொறுத்திருக்கவும்.

அதன் பின்னரும் இயங்கவில்லை எனில் கைத்தொலைபேசியை சரி செய்திடும் பணியாளரிடம் கொடுத்து, சரி செய்ய நீங்கள் மேற்கொண்ட அனைத்து செயற்பாடுகளையும் கூறி, சரி செய்திடச் சொல்லவும்.



## நீங்கள் வாங்கும் NOKIA கைத்தொலைபேசி தரமானதா?

*#06# என்று டயல் செய்யுங்கள். சில எண்கள் வரும். இது IMEI இலக்கம் எனப்படும். (International Mobile Equipment Identity) இந்த எண்ணிலுள்ள 7 மற்றும் 8ஆவது இலக்கத்தைப் பாருங்கள்.

02/20 என்றால் - எமிரேட்ஸ் தரம் மோசம்

08/20 என்றால் - ஜேர்மனி. சுமாரானது.

01/10 என்றால் - பின்லாந்து. நல்ல தரம்




04 என்றால் - சீனா. நல்ல தரம். இதற்கான software வேறு நாடு.

03என்றால் - கொரியா. நல்ல தரம்.

05 என்றால் - பிரேசில். சுமாரானது.

00 என்றால் - அசல். மிக மிக நல்ல தரம். உடலுக்கு தீங்கு விளைவிக்காதது.

03 என்றால் - அசர்பைஜான். மிக மோசமான தரம். உடலுக்கு தீங்கு விளைவிக்கும்.

## கூகிள் பிளஸ் என்றால் என்ன?

கூகிள் பிளஸ் என்பது மற்ற சமூக தளங்கள் போன்று நண்பர்களுடன் உறவுபாலத்தை அமைப்பதற்கான தளம். அனைத்து சமூக தளங்களும் இதைத்தான் செய்கின்றன. ஆனால் அவைகள் ஒவ்வொன்றும், வெவ்வேறு வசதிகளைக் கொண்டிருக்கின்றன. அதே போன்று கூகிள் பிளஸ் சில வசதிகளைக் கொண்டுள்ளது. தற்போது கூகிளின் முகப்பு பக்கத்தில் மாற்றம் வந்திருப்பதை அவதானித்திருப்பீர்கள். அங்கு றநடி என்பதற்கு பக்கத்தில் + you என்ற வயடி வந்திருக்கும். அதனை கிளிக் செய்தால் பின்வரும் வசதிகள் வரும்.

பிளஸ் சேர்கிள்ஸ், நட்பு வட்டம், பதிவர் வட்டம், உறவினர் வட்டம் என்று தனித்தனி குழுக்களை உருவாக்கலாம். நாம் பகிர நினைப்பதை குறிப்பிட்ட வட்டத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் பகிரலாம்.

பிளஸ் ஸ்பாக்ஸ் (+ sparks) நீங்கள் ஒரு விஷயத்தைப் பற்றி அதிகம் கூகிளில் தேடுபவர்களாக இருந்தால், இந்த வசதி உபயோகப்படும். உதாரணத்திற்கு "தொழில்நுட்பம்" என்பதை அதிகம் தேடுபவர்களாக இருந்தால், முதலில் அந்த வார்த்தையைக் கொடுத்துத் தேட வேண்டும். அதற்கான முடிவுகள் வரும்.

அங்கு தேடுபொறி பெட்டிக்கு கீழே Add interest என்பதை கிளிக் செய்தால், அந்த வார்த்தை இடது புறம் வந்துவிடும். பிறகு நீங்கள் தொழில்நுட்பம் பற்றி தேடுவதாக இருந்தால், அந்த வார்த்தையை கிளிக் செய்தால் போதுமானது.

+ Hangouts இணையத்தில் நண்பர்கள் பலருடன் ஒரே நேரத்தில் முகம் பார்த்து உரையாடும் வசதி. இதற்கு உங்களிடம் வெப் கமரா இருக்க வேண்டும்.

## ஸ்கைப் உரையாடல்களை ஒலி, ஒளிப்பதிவு செய்ய வேண்டுமா?

ஸ்கைப் பயன்படுத்துபவர்கள் அதனை பதிவு செய்து வைக்கவும் விரும்பலாம். திருமண நிகழ்வுகள் மற்றும் பல குடும்ப விழாக்களையும் கூட ஸ்கைப் மூலம் கண்டுகளிக்கும் காலம் இது. இப்படியானவற்றை நீங்கள் பதிவு செய்து வைத்துக் கொள்வதற்கும் விரும்பலாம். அதற்கான வசதியைத் சில மென்பொருட்கள் உண்டு.

அதிலொன்று, powergramo pro என்ற மென்பொருளை நிறுவி, ஸ்கைப்பை on செய்யவும். செய்த பின்னர் skype இன் மேற்புறத்தில் allow பண்ணுமாறு ஒரு கோரிக்கை வரும் அதனை allow பண்ணுங்கள். இனி இந்த மென்பொருள் தயார் நிலைக்கு வந்துவிட்டது.

வீடியோ தேவையில்லை ஓடியோ மட்டும் போதுமானால் மென்பொருளின் toolஇற்கு சென்று தேவையான மாற்றங்களை செய்துகொள்ளுங்கள். இப்போது நீங்கள் skype பயன்படுத்தும்போது அது தானாகவே ஒலிப்பதிவு செய்து கொள்ளும்.

இதில் பதிவு' செய்யும் கோப்புகளை இந்த மென்பொருளினூடாகவே படிக்க முடியும். ஆனால் தெரிவு செய்யும் கோப்புகளை export records as சென்று தேவையான format களில் save செய்து கொள்ளலாம்.

## உங்கள் கணினியிலேயே கூகிள் Docs

கூகிளின் பயனுள்ள சேவைகளில் முக்கியமான ஒன்று கூகிள் டொக்ஸ். இந்த கூகிள் டொக்ஸின் மூலம் ஒன்லைனிலேயெ பல்வேறு விதமான கோப்புகளை உருவாக்க முடியும். மேலும் எளிதாக சொல்வதென்றால், கூகிள் டொக்ஸ் முற்றிலும் ஒரு ஒன்லைனில் மைக்ரோசொப்ட் ஆபிஸ் போல செயற்படுகின்றது. கூகிள் டொக்ஸின் மூலம் கோப்புகளை இணையத்திலேயே உருவாக்குவதோடு மட்டுமல்லாமல் அங்கேயே சேமிக்கவும் முடிகிறது. தேவைப்படும்போது தரவிறக்கம் செய்யவும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முடிகிறது.

ஆனால் இதிலிருக்கும் சிக்கல் என்னவென்றால், நமக்கு வேண்டிய நேரத்தில் எல்லாம் இணையத்தில் சென்றே கோப்புகளை கையாள முடியும் அல்லது தரவிறக்கம் செய்யவேண்டியிருக்கும். அப்படியில்லாமல் நம்முடைய கணினியிலேயே இந்த கூகிள் டொக்ஸ் கொண்டு வந்தால் நல்லது.

inSync என்ற மென்பொருளை தரவிறக்கம் செய்து கொண்டு நமது கணினியில் நிறுவ வேண்டும். அதன் பின் insynchq உடன் நம் கணினியில் நிறுவவேண்டிய கூகிள் டொக்ஸ் கணக்கை கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட கணக்கை insynchqapy இணைக்க கூகிளிடம் அனுமதி அளிக்க வேண்டும். இதன் மூலம் insynchq இல் உங்கள் கூகிள் கணக்கின் பெயரிலேயே ஒரு கணக்கு துவங்கப்பட்டுவிடும். மேலும் உங்கள் கணினியின் மை டொக்குமென்ஸில் insync என்ற கோப்பு காணப்படும். அதில் குறிப்பிட்ட கூகிள் டாக்ஸில் உள்ள அனைத்து கோப்புகளும் சேகரிக்கப்பட்டிருக்கும்.




## முதலாவது 4G (4th generation) செல்போன்..

இன்றைய தகவல் தொழில் நுட்பத்துறை வளர்ந்து வருகின்றது. அந்த வகையில் நாம் 4ஆம் தலைமுறையில் (4G) இருக்கின்றோம். ஆனால் அதன் பாவனையை எமது சேவை வழங்குநர்கள் எமக்கு அறிமுகப் படுத்த காலதாமதம் ஆகின்றது. 4G ஆனது அமெரிக்காவில் பாவனையில் உள்ளது.

HTC நிறுவனமானது தனது 4G செல்போனை வெளியிட்டுள்ளது. இதன் பெயர் எவோ (Evo) 4G யுகத்தில் இதுதான் முதலாவது 4G செல்போன் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

EVO செல்போனானது குறிப்பிடத்தக்க சில புதிய வசதிகளைக் கொண்டுள்ளது.

பண்ணை பூராவும் மின்சார விளக்குகள் எரியும். குளிர்ந்த நீர், சூடான நீர் இரண்டும் கிடைக்கும். உஷ்ணமூட்ட அடுப்புகளை தேவையானபடி செய்துகொள்ளலாம். ஸ்நோபால் பேசிமுடித்ததும் தெளிவாகவே எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. காற்றாடி இயந்திரத்துக்குச் சாதகமாகத்தான் வோட்டுக்கள் எல்லாம் விழும் என்று.

ஆனால் அந்தச் சமயம் பார்த்து நெப்போலியன் எழுந்து நின்று, ஸ்நோபாலைப் பக்கவாட்டில் ஒரு தினுசாகப் பார்த்துக்கொண்டு, சன்னமான ஆனால் வெகுதூரம் எட்டக்கூடிய குரலில் சீட்டியடித்தது. அப்படி அது சீட்டி அடித்ததை அதற்குமுன் விலங்குப் பண்ணையில் எந்த மிருகமும் கேட்டதில்லை.

உடனே வெளியே வேட்டை நாய்களின் குரல் பயங்கரமாகக் கேட்டது. கழுத்தில் பித்தளைப் பொத்தான்கள் பதித்த வளையத்துடன் உள்ளே பாய்ந்து ஓடிவந்தன. ஒன்பது பெரிய வேட்டை நாய்கள் ஸ்நோபாலை நோக்கிப் பாய்ந்தன அவை.





கடிக்கத் தயாராக திறந்திருந்த அவற்றின் வாய்களிலிருந்து மயிரிழையில் தப்பித் தாண்டிக் குதித்து ஓடியது ஸ்நோபால்,

ஒரு விநாடியில் அது கொட்டகையை விட்டே வெளியேறிவிட்டது. அதைத் தொடர்ந்து நாய்களும் ஓடின. பேசுவதற்கோ, எதிர்த்துச் சொல்வதற்கோ முடியாதபடி ஆச்சரியமும் பயமுமடைந்த விலங்குகள் எல்லாம் அந்த நாய்கள் ஸ்நோபாலைத் துரத்துவதைப் பார்த்துக் கொண்டு நின்றன. ஸ்நோபால் பெரிய வயலைத் தாண்டி, பண்ணைக்கு வெளியே செல்லும் பாதையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. பன்றியால் மட்டுமே ஓடக்கூடிய வேகத்துடன்தான் ஓடிற்று அது.

ஆனாலும் வேட்டை நாய்கள் அதை விடாமல் துரத்தின. திடீரென்று ஸ்நோபாலுக்கு வழுக்கிவிட்டது. நாய்கள் அதைப் பிடித்துவிட்டன என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் உடனே சமாளித்துக்கொண்டு எழுந்து, முன்னிலும் அதிக வேகமாக ஓடிற்று அது. நாய்கள்தான் வென்றுவிடும்போல இருந்தது. ஒரு நாய் அதன் வாலைத் தன் பல்லால் கவ்விவிட்டது. ஆனால் சமயத்தில் வாலை ஆட்டித் தப்பித்துக் கொண்டது ஸ்நோபால். பிறகு மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடி, வேலியில் இருந்த ஒரு பொந்தில் புகுந்து மறைந்துவிட்டது,

அதற்குப் பிறகு அது விலங்குப் பண்ணையிலிருந்த மிருகங்களின் கண்களில் படவேயில்லை. பீதியடைந்த நிலையில், மௌனமாக எல்லா விலங்குகளும் வந்து மீண்டும் கொட்டகையில் கூடின. ஒருவிநாடிக்குப் பிறகு வேட்டை நாய்களும் தாவிக் குதித்து ஓடி வந்தன. **(நாளை)**

## வரைவோம் வாருங்கள்!



# ஆடும் குள்ள நரிகளும்



அருளன் என்பவரிடம் ஐம்பது செம்மறி ஆடுகள் மட்டும் இருந்தன. அவற்றை மேய்த்து வருவதுதான் அன்றாடப் பணி. அவரிடம் ஒரு கிடா ஆடும் இருந்தது. அது வலிமையான உடல் தோற்றம் கொண்டது.

ஒருநாள் ஆற்றங்கரைப் பக்கமாக அருளன் தனது மந்தைகளை மேய்த்துக்கொண்டிருந்தார். ஒரு புதருக்கள் சென்ற கடா அங்கிருந்த புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அங்கிருந்த கொடிகள் ஆட்டைச் சுற்றிக் கொண்டன. அதனைக் கிடா கவனியாது விட்டதால் பலமாக கொடிகள் ஆட்டைச் சுற்றிக் கொண்டன. மாலையானதும் மற்ற ஆடுகளுடன் சேர்ந்து கிடாவால் வீடு செல்ல முடியவில்லை. கொடிகளை அறுக்கமுடியாமல் சோர்ந்துபோய் நின்றது.


அந்த நேரத்தில் இரண்டு குள்ள நரிகள் அவ்விடத்திற்கு வந்தன. கிடாவின் மனத்தில் அச்சம் மேலிட்டது. குள்ள நரிகளுக்கு மனதுக்குள் மகிழ்ச்சி ஏற்பட்டது. இருப்பினும் சந்தேகம் கொண்டு கிடாவை நெருங்காமல் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டன.

குள்ளநரி ஒன்று கிடாவிடம் கேட்டது, "ஏன் இந்த மாலை நேரத்தில் இங்கே வந்திருக்கிறாய்?" அதற்குப் பதிலளித்த கிடா,

"எங்கள் ஊரில் காளியம்மனுக்கு பலியிடல் பூஜை நடைபெறுகிறது. ஊர்த் தலைவர் கட்டளைப்படி ஒவ்வொரு குடும்பத்தவரும் ஒவ்வொரு கிடா பலியிட வேண்டும். அதனை மறுத்து ஒருவர் சொன்னார், தலைவரே!" அறிவில்லாத கிடா ஒன்றை பலியிடுவதைவிட அறிவுள்ள குள்ளநரிகளைப் பலியிடலாமே!" என்று.

ஊர்த் தலைவர் "குள்ளநரிகளுக்கு எங்கே போவது" என்று கேட்டார். "நாங்களே ஏற்பாடு செய்கிறோம் என்றனர் ஊரவர். எனது எஜமானருக்கு, ஒரு கிடாவுக்கு இரண்டு குள்ள நரிகள், என்ற கணக்குப்படி நான் இங்கே வந்திருக்கிறேன். நல்லவேளை நீங்களே வந்துவிட்டீர்கள்." என்று சொல்லிக்கொண்டே மீண்டும் ஒரு தடவை பலத்துடன் கொடிகளை அறுக்க முயன்றது.

இதைக் கண்ட குள்ளநரிகள் பாய்ந்து ஓடிச் சென்றுவிட்டன. கிடாவும் கொடிகளை அறுத்துக்கொண்டு மந்தையை நோக்கிச் சென்றது.



**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வுரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

## சின்னச் சின்ன பூனையாம்



சின்னச் சின்னப்
பூனையாம்
சீறிப்பாயும் பூனையாம்
கன்னங்கரிய பூனையாம்
கருப்பு மீசைப்
பூனையாம்
இரவில் சுற்றும் பூனையாம்
எலியைப் பிடிக்கும்
பூனையாம்
புலியைப் போன்ற பூனையாம்
புத்திசாலிப்
பூனையாம்

## விடுகதைகள்




1. வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அவன் யார்?
2. எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன?
3. ஏற்றி வைத்து அணைத்தால் எரியும் வரை மணக்கும் அது என்ன?
4. மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன?
5. தொட்டால் மணக்கும், சுவைத்தால் புளிக்கும். அது என்ன?

விடைகள்:
1. கத்தரிக்கோல் 2. விக்கல்
3. ஊதுபத்தி 4. பஞ்சு
5. தேசிக்காய்


சுடோக்கு எண் 42 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 9 | 1 | 5 | 8 | 3 | 6 | 2 |
| 8 | 3 | 6 | 9 | 2 | 7 | 5 | 1 | 4 |
| 5 | 2 | 1 | 6 | 4 | 3 | 7 | 8 | 9 |
| 1 | 8 | 7 | 5 | 3 | 4 | 2 | 9 | 6 |
| 4 | 9 | 5 | 2 | 8 | 6 | 1 | 7 | 3 |
| 2 | 6 | 3 | 7 | 1 | 9 | 8 | 4 | 5 |
| 3 | 7 | 8 | 4 | 9 | 5 | 6 | 2 | 1 |
| 6 | 1 | 4 | 3 | 7 | 2 | 9 | 5 | 8 |
| 9 | 5 | 2 | 8 | 6 | 1 | 4 | 3 | 7 |

சுடோக்கு எண் 43

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 8 | 4 | 7 | 5 | |
| | 8 | 4 | | 5 | 6 | | | |
| 3 | | | | | 1 | | | |
| 5 | | 1 | | | | | 9 | |
| | | 7 | | | | 3 | | |
| | 3 | | | | | 1 | | 5 |
| | | | 1 | | | | | 8 |
| | | | 4 | 9 | | 6 | 2 | |
| | 4 | 9 | 8 | 6 | | | 1 | |

# இரண்டு தீர்ப்புகள்; படிப்பினை ஒன்றுதான்!



மும்பைத் தாக்குதலில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கசாப்

ஆகஸ்ட் 30ஆம் திகதி செய்தித்தாள்களில் இரண்டு விதத் தீர்ப்புகள் இருவேறு நீதிமன்றங்களால் வழங்கப்பட்டது. செய்திகளாக வெளிவந்துள்ளன. இந்த இரண்டு வித வழக்குகளும் சாராம்சத்தில் மதவெறி சேர்ந்த இனவெறி சம்பந்தமானதுதான். ஆனால் தீர்ப்புகள் இரண்டுமே இந்திய மக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய, நம்பிக்கையளிக்கக்கூடிய தீர்ப்புகள்தான். ஒரு வழக்கு, நம் அண்டை நாடான பாகிஸ்தானிலிருந்து பயங்கரவாதிகளின்-மதவெறியர்கள் திட்டமிட்டு நடத்திய தாக்குதல். மற்றொன்று இந்தியா வின் குஜராத் மாநிலத்தில் கோத்ராவில் ரயில் எரிப்பையொட்டி நடந்த கொலை வெறித் தாக்குதல்கள். ஒன்று, பாகிஸ்தான் மதவெறியர்களான முஸ்லிம்கள் - பயங்கர வாதிகள் நடத்திய கொலைவெறி. மற்றொன்று முஸ்லிம் மக்கள் மீது இந்து மத வெறியர்கள் நடத்திய கொலைவெறித் தாக்குதல். இரண்டு நிகழ்ச்சிகளும் இந்தியாவை அதிர வைத்துவிட்டன.

பாகிஸ்தான் பயங்கரவாதி லஷ்கர்-ஏ-தொய்பா அமைப்பைச் சேர்ந்தவன் - அஜ் மல் காசப் என்பவன். அவனுக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் சி.கே. பிரசாத், அல்டாப்ஃ ஆலம் தூக்குத்தண்டனை தீர்ப்பு வழங்கி யுள்ளார்கள். இது ஒரு சரித்திரப்பூர்வமான தீர்ப்பு. இவனோடு வந்த மற்ற தீவிரவாதிகள் சுடப்பட்டார்கள். இவன் ஒருவன் மட்டும் துக்காராம் ஓம்பலே என்ற போலீஸ்காரரால் உயிரோடு பிடிக்கப்பட்டான். ஆகவே தாக்குதல்களின் விவரங்கள் தெரிய வந்தன. பாகிஸ்தான் தீவிரவாதி என்று தெரிந்தது. அல்லாது [illegible]யிருந்தால் உச்சநீதிமன்றம் சொன்னதுபோல் இந்திய முஸ்லிம் மக்கள் தான் இந்தக் கொலைவெறிக்கு சம்பந்தப் பட்டவர்கள் என்று பிரச்சாரமாகி திசை திருப்பப்பட்டிருக்கும். இந்தக் கொடியவன் அஜ்மல் காசப், தான் செய்த தவறுக்கு கடைசி வரை வருத்தம் தெரிவிக்கவில்லை. இதில் நமக்கு வியப்பில்லை.

ஆனால் குஜராத் மாநில முதலமைச்சர், நரோடா பாட்டியா இனவெறி கொலையில் ஈடுபட்ட இந்துமத வெறியர்களுக்கு குஜராத் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியுள்ளதற்குப் பிறகாவது, அந்தக் கொடியோர்களால் சிறுபான்மை முஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும். மறுத்துவிட்டார். கொலைகள் நடந்த நரோடாவில் 97 பேர் அதில் பெரும்பாலும் இஸ்லாமியப் பெண்கள், குழந்தைகள் பதைக்கப் பதைக்க கொல்லப்பட்டார்கள். எரியும் நெருப்பில் வீசியெறியப்பட்டார்கள். இதுவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலைகள்தான். நான் குற்றவாளியே அல்ல. ஆகவேதான் நான் விடுவிக்கப்பட்டேன். நான் மன்னிப்புக் கோரவோ, வருத்தம் தெரிவிக்கவோ அவசியம் இல்லை என்கிறார். வருங்கால பிரதம மந்திரியாக வர, அந்தப் பதவியின் மீது கண் வைத்திருக்கும் நபரின் இலட்சணம் இது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி முன்னாள் இயக்குநர் ஆர்.கே. ராகவன் தலைமையில் சிறப்பு புலன் விசாரணைக்குழு அமைக்கப்பட்டுதான், அது இந்தக் கொலை வெறித்தாக்குதல்களை விசாரணை நடத்தி உச்சநீதிமன்றத்தில் இந்த விரிவான விவரங் களைத் தந்தது. காரணம், குஜராத் பொலிஸ் கோத்ரா ரயில் எரிப்புக்குப் பிறகு நடந்த இனவெறிப் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக சரியாக ஆய்வு



கோத்ரா ரயில் எரிப்பு

நடத்தவில்லை. இந்த சிறப்பு புலன் விசாரணைக்குழு செவ் வனே செயல்பட்டது. ஆனாலும், முதலமைச்சர் மோடி இந்த மதவெறி படுகொலையில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்படவில்லை என்று அவரை குற்றப் பத்திரிகையிலிருந்து விடுவித்துவிட்டது. இது ஒரு சோகம். அதனால்தான் மோடி, தான் குற்றம் ஏதும் செய்யாதவன். எனவே நான் ஏன் மன்னிப்புக் கோரவேண்டும் என்று சொன்னதோடு, படுகொலைகளுக்கு வருத்தம் தெரிவிக்கவும் மறுத்துவிட்டார். எனினும் அவர் சிறப்பு புலன் விசாரணைக் குழுவால் விடுவிக்கப்பட்டது இன்னமும் சர்ச்சைக்குரியதாகத்தான் உள்ளது.

குஜராத் சிறப்பு நீதிமன்றம் 29 பேரை போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் விடுதலை செய்துவிட்டது. ஆனாலும், அவர்கள் அப்பாவிகள் என நீதிமன்றம் சொல்லவில்லை.

சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மாயாபென் கோத்னானியும் தண்டிக்கப்பட்டுள்ளதால் முதலமைச்சர் மோடி இராஜினாமா செய்ய வேண்டும் என்ற குரல் வந்தபோது, படுகொலைகள் நடந்த நேரத்தில் கோட்னானி அமைச்சர் பதவியில் இல்லை என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது. கொலை நடந்தபோது அவர் அமைச்சராக இல்லை என்றாலும், கொலை குற்றப்பத்திரிகையில் உள்ள அவர் - விசாரணையில் உள்ள அவர் எப்படி அமைச்சராக ஆக்கப்பட்டார் என்ற கேள்விக்கு பதில் இல்லை. இந்தப் பெண், மோடிக்கு மிக நெருக்கமானவர் என்பதை யாரே மறுக்கவல்லார்?

சிவசேனா தலைவர், மகிழ்வோடு காலம் தாழ்த்தாது உடனடியாக காசப் தூக்கில் போடப்படவேண்டும் என்கிறார். பாரதிய ஜனதா கட்சித் தலைவரும் காசப்பிற்கு வழங்கப்பட்ட தூக்குத்தண்டனையை வரவேற்றதோடு, அவன் உடனடியாகத் தூக்கில் போடப்பட வேண்டும் என்கிறார். ஆனால், குஜராத் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு, இந்தக் கும்பலை வாய் அடைக்க வைத்துவிட்டது.

கோத்ரா ரயில் எரிப்பிற்குப் பிறகு குஜராத்தில் அரசின் ஆதரவோடு நடந்த இனவெறி - மதவெறிப் படுகொலைகளில் பலியானவர்கள் பல நூறு பேர். எரிந்த வீடுகள், உயிரோடு எரிக்கப்பட்டோர் ஏராளம். அதிலும் அந்த மாநிலத்தில் நரோடாவில் இஸ்லாமிய பெண்கள் 97 பேர் கொல்லப்பட்டதும் (குழந்தைகள் உட்பட) எரிக்கப்பட்டதும், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதும், மிகக் கொடுமையானது, அதீதமானது. இந்தக் கொடுமைகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று ஜனநாயகவாதிகளும், மனிதநேய வல்லுநர்களும், மத நல்லிணக்கம் வேண்டுவோரும், மதச்சார்பற்ற கொள்கையாளர்களும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார்கள். ஓரளவு அவர்களின் வேண்டுகோள் இந்தத் தீர்ப்பின் மூலம் நிறைவேறியுள்ளது.

ஒரே நாளில் இரண்டு தீர்ப்புகள் வந்துள்ளதன் பாடம், சிறுபான்மை பயங்கரவாதமானாலும், பெரும்பான்மை பயங்கரவாதமானாலும் இரண்டுமே எதிர்க்கப்பட வேண்டிய கொடுமைகள். ஒதுக்கப்பட வேண்டிய ஆபத்து.

**தே.லட்சுமணன் - குஜராத்**

# பெண்ணடிமைத்தனம்



ஆதிகால மனித வாழ்விலே பெண்- ஆண் சமத்துவம் நிலவியதாக எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். மனிதர் கூட்டங்களாகவும், குழுக்களாகவும் வாழ்ந்தார்கள் இங்கு.

1. எல்லா முடிவுகளையும் ஆண்களும் பெண்களும் இணைந்தே எடுத்தார்கள்.
2. இருபாலாருக்கும் சமமான கடமைகளும், உரிமைகளும் இருந்தன.
3. இருபாலாருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டன.
4. உற்பத்திக் கருவிகள் ஒரு அல்லது கூட்டுக் குடும்பத்தில் ›பொதுவாக இருந்தது.
5. சமூக உற்பத்தி பொருளியற் செயற்பாடுகளில் பெண்கள் பங்களிப்பு அதிகமாக நிலவியது.

ஆதி சமுதாயத்தில் ஈட்டி உருவானது. அதை எடுத்துக்கொண்டு வேட்டைக்குப் போவார்கள் சிலர். காலப்போக்கில் இடையர் என்று அழைக்கப்பட்டனர் வேறு சிலர் விவசாயம் செய்தனர். அவர்கள் விவசாயிகள் என்று அழைக்கப்பட்டனர். இப்படித்தான் சாதி முறை உருவானது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி வந்தன. புதிய தொழில் செய்தனர். ஆனால் பழைய சாதிப்பெயர் மறையவி ல்லை, மனித இனங்கள் தொடக்கத்தில் தாய்வழி முறையிலே பின்பற்றி வந்தது. மனித உறவுகள் முழுமைப்படாத குழு, கூட்டு வாழ்க்கை அமைப்பில் தாய்வழி முறையையும், குருதி உறவுகளையும் தாய் வழியாகவே கண்டன.

இதைவிடப் பிள்ளை பெற்றுக்கொள்ளுதல், வளர்த்தல், மாதவிலக்குக் காலம் நிலைமை களால் முதியோருடன் பெண்களும் வீட்டிலே அதிக நாட்கள் தங்கி வாழ்ந்தனர். ஆனாலும் சிறு அளவிலான வீட்டுத்தோட்டம் ஆடு, மாடு வளர்த்தல், நெருப்பைக் கொண்டு உணவு தயாரித்தல், ஆடைகள் நெய்தல், வீட்டுக்குத் தேவையான தளபா- டங்கள் சமையல் உபகரணங்கள் என்பவற்றை சேகரித்தல், பாதுகாத்தல், சுத்தம் செய்தல் என்பன பெண்கள் மேல் குவிந்தன. பெரிய வயல் வெளிகள், பெரிய குளங்கள், காணப்படுகின்றன. இவை மன்னர் ஆட்சிக்காலத்திற்கு முன்பே உருவாகிவிட்டன. இவை மனித குழுக்களினால் கூட்டாக சேர்ந்து உருவாக்கப்பட்டன.

தனியுடமை உருவானபொழுது போட்டி, பொறாமை, போர் என்பன உருவகித்தன. ஆண்கள் வேட்டை ஆயுதங்களாகிய வில், அம்பு, ஈட்டி என்பனவற்றை போரில் வெற்றி கொள்ளப் பாவித்தனர். இப்படி ஆண் ஆதிக்கம் உருவாகியது. தேவைக்கு அதிகமான உணவு வகைகளை சேமித்து வைத்தல் போட்டியை உருவாக்கியது. ஆதி சமூகத்தில் அறுவடைக்குப் பின்பு உணவு பங்கீட்டு முறை இருந்து வந்தது. ஒரு தொழில் தொடர்ந்து செய்பவர்கள் நிபுணத்துவம் அடைந்து விடுகின்றார்கள். இது பரம்பரையாக தொடரும் பொழுது வாய்மொழிக் கல்வியாக பரம்பரைகள் அறிந்து கொள்கின்றன. புதிய தொழில்கள் உருவாகின்றன. புதிய நிபுணர்கள் உருவாகின்றனர். இவர்கள் அதிக ஊதியம் தேடி இடம்பெயர்கின்றனர். பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்கின்றனர். ஆடைத் தொழிற்சாலை வேலைகளுக்காகவும் இடம் பெயர்கின்றனர். இன்று எல்லா வேலைகளிலும் ஆண், பெண் சமத்துவம் பேணப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் உருவான கைத்தொழிற் புரட்சியின் பின் சம வேலை வாய்ப்பு, சம சந்தர்ப்பம், சமமான சம்பளம் என்பன இல்லாமல் போனது.

ஆனால் 1917 ரஷ்ய புரட்சியின் பின்பு அங்கு எல்லாவற்றிலும் சமத்துவம் கிடைத்தது. இன்று உலகெல்லாம் தொடர்கிறது.

**மேலும் சில கருத்துக்கள்**

*பயிர் தொழில் நுட்பம் வளர்ச்சி பெற்ற பொழுது அதை ஆண்களே ஆரம்பித்து கையாண்டார்கள். இது ஆண் ஆதிக்கத்தை உருவாக்கியது.

*திஹனைப்புலம் காவல் காவல் காக்கும் பொறுப்பு எல்லோரும் கூட்டாகவே செய்தனர். இங்கேயும் இலேசான வேலை பெண்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

*தனி உடமை உருவாகி அரசர்களின் இடங்கள் கைப்பற்றும் போர் நடந்தது. போர்வீரர்களுக்குப் பரிசாக பயிர்ச்செய்கை நிலங்கள் வழங்கப்பட்டன. தோற்றவர்களும் தொடர்ந்து பயிர் செய்ய அனுமதிக்கப்பட்டனர். வீரர்கள் குறைவாகவும் மற்றையோர் கூடிய அளவு வரியாக தானியங்கள் அரசுக்கு கொடுத்தனர்.

**- சி.குமாரலிங்கம்**

# சீனாவையும், ஈரானையும் கடுமையாக கையாள பராக் ஒபாமா தவறிவிட்டார்

## மிட் ரோம்னி குற்றச்சாட்டு


அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராக மிட் ரோம்னி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில், உரை ஒன்றை நிகழ்த்தினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறுகிறது.

ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து குடியரசுக் கட்சி வேட்பாளராக மிட் ரோம்னி(வயது 65) களமிறங்குகிறார்.

ரோம்னியை தெரிவு செய்து அதிகாரப்பூர்வ வேட்பாளராக அறிவிக்க புளோரிடா மாகாணத்தில் உள்ள தாம்பாவில் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடந்தது.

பெரும்பான்மை உறுப்பினர்களால் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்ட ரோம்னி பேசுகையில், எரிசக்தித் தேவையில் முற்றிலும்



சுயசார்பு நாடாக அமெரிக்காவை மாற்றுவேன்.

நிதிப் பற்றாக்குறையை போக்கி 1.20 கோடி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன்.

பிரச்னையில் சிக்கித் தவிக்கும் அமெரிக்க பொருளாதாரத்தை வெற்றிகரமாக மீட்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது

வெளியுறவு விவகாரங்களை பொறுத்தவரை உலக நாடுகளுடன் அமெரிக்கா நம்பிக்கைக்குரிய கூட்டாளியாக இருப்பதை உறுதி செய்வோம். ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலை ஒபாமா தலைமையிலான அரசு தடுக்காமல் விட்டது, இது ஒவ்வொரு அமெரிக்கரையும் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளிவிட்டது.

சர்வதேச அளவில் ஈரானையும், சீனாவையும் ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு கடுமையாக கையாளத் தவறிவிட்டது.

உள்நாட்டிலும் ஒபாமாவின் கொள்கைகள், நடுத்தர மக்களுக்கும், வேலையற்ற மக்களுக்கும் உதவவில்லை. சிறுதொழிலுக்கான வரியை உயர்த்தியது, வேலையின்மையை உருவாக்கிவிட்டது.

நிலக்கரி, எரிவாயு, எண்ணெய் துறையில் குளறுபடி செய்ததால் எரிபொருள் மற்றும் உற்பத்தித்துறை வேலைவாய்ப்புகள் சீனாவுக்கு மாறிவிட்டன என்று தெரிவித்தார்.


# உலகின் முதன் முதலாகச் செயற்கை கண் பொருத்தப்பட்ட பெண்ணின் சுவாரஸ்ய தகவல்

தன்னால் ஒளிக்கற்றை மற்றும் கோடுகளை பார்க்க முடிவதாக உலகின் முதன் முதலாக மாதிரி செயற்கை கண் பொருத்தப்பட்ட அவுஸ்திரேலிய பெண் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் கிழக்கு மெல்போர்னில் உள்ள றொயல் விக்டோரியன் கண் மற்றும் காது மருத்துவமனையில் டேனி ஆஷ்வொர்த்(வயது 54) என்ற பார்வைத் திறனற்ற பெண்ணுக்கு முதல் முறையாக செயற்கைக் கண் கடந்த மே மாதம் பொருத்தப்பட்டது.

மெல்போர்ன் பையோனிக்ஸ் இன்ஸ்டிடியூட்டில் நடந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து, கடந்த மாதம் கருவி ஸ்விட்ச் ஆன் செய்யப்பட்டது.

இதன் பிறகு ஆஷ்வொர்த்துக்கு பிம்பங்களை முழுமையாக பார்க்கும் திறன் கிடைத்து விட்டதாக அவுஸ்திரேலியாவில் இருந்து



வெளியாகும் சிட்னி மார்னிங் ஹெரால்டு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தனது அனுபவம் குறித்து ஆஷ்வொர்த் கூறுகையில், திடீரென ஒளிக்கற்றைகள் கண் முன் தோன்றின. பலப்பல வடிவங்கள் கண்ணுக்கு முன் தோன்றுகின்றன. ஒவ்வொரு முறையும் மூளையில் வித்தியாசமான தூண்டல்களை உணருகிறேன் என்றார்.

ஆஷ்வொர்த் கூறும் பல்வேறு அம்சங்களை ஆய்வாளர்கள் பதிவு செய்து வருகின்றனர். இத்தகவல்களின் அடிப்படையில், காட்சி பிம்பங்களை முழுமையாக கிரகிக்கும் வகையில் செயற்கை கண் கருவியை மேம்படுத்தும் பணியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

பையோனிக்ஸ் இன்ஸ்டிடியூட் இயக்குனர் ராப் ஷெப்பர்டு கூறுகையில், ஆஷ்வொர்த் என்ன பார்க்கிறார் என்பதை துல்லியமாக தெரிந்து கொள்ள முயற்சிக்கிறோம். விழித்திரையில் காட்சிகள் படும் போது, என்ன விதமான தூண்டுதல் கிடைக்கிறது என்பதையும் நுணுக்கமாகப் பதிவு செய்து வருகிறோம்.

காட்சிகளில் தெரியும் வடிவம், ஒளியின் பொலிவு, அளவு போன்றவை விழித்திரையில் படும் போது மூளைக்கு கிடைக்கும் தகவல்கள் குறித்தும் ஆராயப்படுகிறது.

2013 அல்லது 2014ஆம் ஆண்டுக்குள் செயற்கைக் கண் தொழில்நுட்பம் முழுமை பெறும் என நம்புகிறோம் என்றார்.

# குடியரசுக் கட்சி மாநாட்டில் வரலாற்றில் முதன் முதலாக சிறப்புப் பிரார்த்தனை

அமெரிக்காவின் குடியரசுக் கட்சி மாநாட்டில் சீக்கிய மதத்தை சேர்ந்தவர் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை இறுதி செய்ய குடியரசுக் கட்சி மாநாடு புளோரிடா மாகாணத்தின் தாம்பா நகரில் நடந்தது.

கடந்த மாதம் 30ஆம் திகதி மாநாட்டு தொடக்க நிகழ்ச்சியின் போது, அமெரிக்க தேசிய கீதத்துக்கு அடுத்த படியாக சீக்கிய பிரார்த்தனை நடத்தப்பட்டது.

புளோரிடாவின் சீக்கிய சமுதாயத்தின் தலைமை குரு ஈஸ்வர் சிங் இந்த பிரார்த்தனையை, நடத்தினார்.

சீக்கிய மத பிரார்த்தனையுடன் மாநாடு துவக்கப்படுவது குடியரசுக் கட்சி வரலாற்றில் இதுவே முதல் முறை.



விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள ஓக் க்ரீக் குருத்வாராவில் கடந்த மாதம் 5ஆம் திகதி நிறவெறியரின் துப்பாக்கிச் சூட்டில் ஆறு சீக்கியர்கள் பலியாயினர்.

இந்த சூழலில் சீக்கியர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் தேர்தல் நெருங்கும் நிலையில் அவர்களின் ஆதரவை பெறவும், சீக்கிய மதத் தலைவர் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டதாக கருதப்படுகிறது. இதுகுறித்து ஈஸ்வர் சிங் கூறுகையில், அமெரிக்காவுக்கு வந்து 40 ஆண்டுகள் ஆகின்றன. இதுபோன்ற அனுபவம் எனக்கு கிடைக்கும் எனக் கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. குடியரசுக் கட்சி மாநாட்டில் ஒரு சீக்கியர் என்ற முறையிலும், அமெரிக்கர் என்ற முறையிலும் மிகப் பெரிய கௌரவத்தை எனக்கு வழங்கினர் என்றார்.

# உலக பார்வை


## சீனாவில் நிலக்கரி சுரங்க வெடி விபத்து: 43 பேர் பலி

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் உள்ள சியஜியாவான் நிலக்கரி சுரங்கத்தில் திடீரென ஏற்பட்ட விபத்தில் 43 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 7 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் உள்ள சியஜியாவான் நிலக்கரி சுரங்கத்தில் 150 சுரங்கத் தொழிலாளர்களுடன் பணி நடந்து கொண்டிருந்தது.

அப்போது திடீரென எரிவாயு சிலிண்டர் ஒன்று வெடித்து சிதறியதில், கார்பன்டை ஆக்ஸைடு வாயு நிரம்பி அங்கு வேலை செய்தவர்களில் பலர் மூச்சு திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். உடனடியாக மீட்புப்பணிகளை துரிதப்படுத்தப்பட்டு பாதிக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இந்த வெடிவிபத்தில் இதுவரை 43 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஏழு பேரின் நிலைமை



கவலைக்கிடமாக உள்ளது.

மூன்று பேரின் நிலைமை என்னவென்று தெரியாத நிலையில் இன்னும் யாரேனும் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்களா என மீட்புப்படையினர் தேடி வருகின்றனர்.

விபத்துக்குள்ளான சுரங்க நிறுவனத்தின் முதலாளி கைது செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

சுரங்க தொழில் அமோகமாக நடைபெற்று வரும் சீனாவில், இவ்வாறான விபத்துகளின் மூலம் கடந்தாண்டு மட்டும் 1973 பேர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மாலைதீவின் முன்னாள் அதிபர் நஸீத் தன் மீதான குற்றச்சாட்டு குறித்த தேசிய விசாரணை கமிஷனின் அறிக்கை வெளியான பின்னர் தலைநகர் மாலேயில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.

## ஹக்கானி வெளிநாட்டு பயங்கரவாத இயக்கமா?

பாகிஸ்தானை சேர்ந்த ஹக்கானி இயக்கம் வெளிநாட்டு பயங்கரவாத இயக்கமா என்பது குறித்த அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகயுள்ளது.

ஹக்கானி இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மனதாக ஒப்புதல் அளித்தனர். இது தொடர்பாக கொண்டு வரப்பட்ட மசோதாவில் ஆகஸ்ட் 10ஆம் திகதி ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.

ஹக்கானி இயக்கம் குறித்த முடிவை 30 நாள்களுக்குள் ஹிலாரி அறிவிக்க வேண்டுமென அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இது தொடர்பான அறிக்கையை ஹிலாரி கிளின்டன் வருகிற 9ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளார். இந்நிலையில் ஹிலாரி கிளிண்டன், ஹக்கானி இயக்கத்துக்கு அமெரிக்கா ஏற்கெனவே நெருக்கடி அளித்து



வருகிறது. ஹக்கானி இயக்கத் தலைவர்கள் சிலர் சர்வதேச பயங்கரவாதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அந்த இயக்கத்தின் மீது நடவடிக்கை குறித்து அடுத்த வாரம் தெரிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுக்கு அச்சுறுத்தலாகவும் ஆப்கானில் உள்ள அமெரிக்க படைகள் மீது தாக்குதலில் ஈடுபட்டு வரும் ஹக்கானி இயக்கத்துக்கு தடை விதித்தால், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பிற நாடுகளில் அந்த இயக்கத்தினர் நிதி ஆதாரங்கள் திரட்டுவது தடை செய்யப்படும்.

# ஆடம்பர வாழ்க்கைக்காக கணவன்களை ஏமாற்றினேன்:

## - கேரள அழகி சகானா தெரிவிப்பு



காதல் மற்றும் திருமணங்களின் மூலமாக பல ஆண்களின் வாழ்க்கையை நாசமாக்கிய கேரள அழகி சகானா கைது செய்யப்பட்டார்.

கர்நாடகா மாநிலம் பெங்களூரில் பிடிபட்ட சகானாவை இரவோடு இரவாக சென்னை கொண்டு வந்த தனிப்படை பொலிஸார் அவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சகானாவிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில் ஆடம்பர வாழ்க்கைக்காக பல ஆண்களை திருமணம் செய்து ஏமாற்றினேன் என்றார்.

கேரளா மாநிலம் பத்தினம் திட்டாவைச் சேர்ந்த இவர் முதலில் சித்திக் என்பவரை திருமணம் செய்தார். பின்னர் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்தானது.

இதன் பின்னர் சென்னையில் சூப்பர் மார்க்கெட்டில் வேலைக்கு சேர்ந்த சகானாவுக்கு பல ஆண்களுடன் நெருக்கம் ஏற்பட்டது.

இதன் மூலமே மணி கண்டன், உதவி இயக்குனர் ராகுல், பிரசன்னா என 4 பேரை திருமணம் செய்திருக்கிறார் சகானா.

மேலும் தனக்கு ஏராளமான ஆண் நண்பர்கள் இருப்பதாகவும் விசாரணையில் தெரிவித்துள்ளார்.



# இந்திய செய்திகள்

## திருட்டுப் போன பொருளை மீட்டுக்கொடுத்த அகிலேஷ் யாதவ்



திருடனிடம் பறிகொடுத்த வயதான தம்பதியினரின் மணி பர்சை உத்திர பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ் மீட்டுக் கொடுத்தார்.

உத்திர பிரதேச மாநிலம் காசியாபாத் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் வயதான தம்பதிகளான அஜெய் சதூர்வேதி, மனைவி சுசித்ரா சதூர்வேதி.

கடந்த 5 நாட்களுக்கு முன்பு சுசித்ரா சதூர்வேதியின் மணிபர்ஸ் திருடு போனது. அதில் கிரடிட் கார்டு உள்ளிட்ட முக்கிய பொருட்கள் இருந்துள்ளன.

இது தொடர்பாக அம்மாநில முதல்வர் அகிலேஷ் யாதவை சந்தித்து தங்களுக்கு நடந்த விடயத்தை தெரிவித்தனர்.

பின்னர் அகிலேஷ் யாதவ் இது குறித்து பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.


முதல்வர் உத்தரவின் பேரில் பொலிஸார் அதிடியாக இறங்கி திருடர்களை பிடித்தனர்.

மேலும் அவர்களிடமிருந்து கிரிடிட் கார்டு உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டன.

தக்க சமயத்தில் திருட்டுப் போன மணி பர்ஸ் திரும்ப கிடைக்க உதவிய முதல்வர் அகிலேஷுக்கு நன்றி தெரிவித்தனர்.

## செல்போன் கோபுர கதிர்வீச்சு:

# புதிய விதிகளை அமுல் படுத்திய மத்திய அரசு



செல்போன் கோபுரங்கள் மற்றும் செல்போன் ஹேண்ட் செட்டுகள் குறித்து புதிய விதிகளை மத்திய தொலை தொடர்புத்துறை அமைச்சர் கபில் சிபல் அறிவித்துள்ளார்.

செல்போன் கோபுரங்களால் அதிகளவு கதிர்வீச்சுகள் ஏற்படுவதாகவும் இதன் காரணமாக மக்களுக்கு பாதிப்பு உள்ளதாகவும் புகார் எழுந்தது.

இந்நிலையில் நேற்று மத்திய தொலை தொடர்புத்துறை அமைசசர் கபில் சிபல் புதிய விதிகள் குறித்து விளக்கினார்.

இது தொடர்பாக மத்திய அரசு அறிவித்துள்ள விதிமுறைகள் வருமாறு:

1. செல்போன் கோபுரங்கள் வைத்துள்ளவர்கள் தற்போதுள்ள கதிர் வீச்சு அளவை 10 ல் ஒரு பங்காக குறைத்திட வேண்டும்.

2. இரு செல்போன் கோபுரங்கள் வைத்துள்ளவர்கள் குடியிருப்பு பகுதிகளில் இருந்து குறைந்தபட்சம் 35 மீ தொலைவில் இருக்க வேண்டும்.

3. செல்போன் ஹேண்ட்செட் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு அட்டை பெட்டிகளில், செல்போன்களின் கதிர்வீச்சு அளவினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

4. இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு செல்போன்களின் கதிர் வீச்சு அளவும் குறைக்க வேண்டும்.

இந்த விதிமுறைகள் இன்று முதல் அமலுக்கு வருகிறது என்றும் இப்புதிய விதிமுறைகளை பின்பற்றாத நிறுவனங்களுக்கு குறைபட்சம் 'ரூ. 5 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிகளின் மூலம் கதிர் வீச்சினால் ஏற்படும் அபாயங்களுக்கு மத்திய அரசு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.



சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அருகேயுள்ள வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்திற்கு வந்துள்ள வெளிநாட்டுப் பறவைகள்.

# ரைம் அட்டைப் படத்தில் அமீர்கான்




சத்யமேவ ஜெயதே நிகழ்ச்சியின் இரண்டாம் பாகத்தை தற்போது நாட்டு மக்கள் அனைவரும் எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் நிகழும் பல அவலங்களை உலகுக்கு வெளிப்படுத்திய அமிர்கானை கௌரவிக்கும் விதமாக ரைம் பத்திரிக்கை அவரது படத்தை அட்டைப் படத்தில் வெளியிட்டுள்ளது.

மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றும் நிலைமை, மருத்துவத் துறையில் நிலவிவரும் முறைகேடு உள்ளிட்ட விடயங்களை தான் நடத்தி வந்த சத்யமேவ ஜெயதே நிகழ்ச்சியின் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தினார் நடிகர் அமீர்கான்.


இந்நிகழ்ச்சி மூலம் சமுதாயத்தில் நிகழும் பல அவலங்களை அமீர்கான் எடுத்துக்காட்டினார்.

இதன் காரணமாக பொலிவுட் நடிகர் அமிர் கானை கௌரவிக்கும் வண்ணம், அமெரிக்கப் பத்திரிகையான ரைம் பத்திரிகை தனது அட்டைப் பக்கத்தில் அவரது புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

சத்யமேவ ஜெயதே நிகழ்ச்சி, மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றிருந்த நிலையில் மருத்துவத் துறையில் கொடிகட்டிப் பறப்போர் உள்ளிட்ட பெரும்பாலோனோரின் எதிர்ப்பையும் சம்பாதிக்க தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அணு உலையை தகர்க்கும் சதித்திட்டம் முறியடிப்பு

## 16 பேர் கைது



கர்நாடகா மாநிலத்திலுள்ள அணு உலையை தகர்ப்பது உட்பட முக்கிய அசம்பாவிதங்களை நிகழ்த்த இருந்த பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு, லஷ்கர்- இ- தொய்பா அமைப்பைச் சேர்ந்த 11 பேரை அம்மாநில பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் பொறியியலாளர், பத்திரிகையாளர், எம்.பி.ஏ. மாணவனும் அடங்குவர்.

இவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் இன்று ஐதராபாத்தில் 24 வயது மதிக்கத்தக்க ரஹ்மான் என்ற பெயருடைய மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் விசாரணையின் அடிப்டையில் மகாராஷ்டிராவில் நான்டேட் பகுதியில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அணு உலையை தகர்க்க திட்டம்: இந்த 4 பேரும் இந்தியாவில் பல்வேறு சதி திட்டங்களில் ஈடுபட முயற்சி செய்துள்ளனர்.

இது குறித்து பொலிஸாரின் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது: சதி திட்டம் சவுதி அரேபியாவில் இருந்து தீட்டப்பட்டுள்ளன.

பிரபல தொழிலதிபர்கள் 2 பேர், இந்து அமைப்பை சேர்ந்த ஒருவரை கொலை செய்வது மற்றும் கர்நாடகாவில் உள்ள கைகா அணு உலை மீது தாக்குதல் நடத்துவது போன்றவை இவர்களின் சதித் திட்டம் ஆகும்.

இது குறித்து பெங்களூர் பொலிஸ் கொமிஷனர் முகர்ஜி, நாட்டில் வன்முறையை ஏற்படுத்தி பதட்டத்தை ஏற்படுத்தவும், பல்வேறு சதி செயல்களில் ஈடுபடவும் இவர்கள் முயற்சியில் இறங்கியுள்ளனர் என்றார்.

# மருத்துவப் பரிசோதனை: சோனியா வெளிநாடு பயணம்

மருத்துவப் பரிசோதனைக்காக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளிநாடு சென்றுள்ளார்.

மருத்துவப் பரிசோதனைக்காக வெளிநாடு சென்றுள்ள சோனியா காந்தி, ஒரு வாரத்தில் இந்தியா திரும்புவார் என காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்தன் திவேதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சோனியா காந்தி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளிநாட்டில் அறு வைச் சிகிச்சை மேற்கொண்டார்.

அறுவைச் சிகிச்சைக்குப் பின், கடந்த பெப்ரவரி மாதம் மருத்துவப் பரிசோதனைக்காக அவர் வெளிநாடு சென்றது குறிப்பிடத்தக்கது.

எந்த நோய்க்கான மருத்துவ பரிசோதனைக்கு சோனியா வெளிநாடு சென்றுள்ளார் என்பது தெரிவிக்கப்பட வில்லை.

## யாழ். மாவட்ட அணி வெற்றி:

# பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெற்றிக்கிண்ணத்திற்காக மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணி தனது முதலாவது வெற்றியைப் பெற்றுள்ளது. நுவரெலியா பொது விளை யாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கம்பஹா மாவட்ட அணியும் மோதின. முதலில் துடுப் பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 47 ஓட்டங்களையும் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கம்பஹா மாவட்ட அணி 43 ஓட்டங்களையும் பெற்றன. யாழ். மாவட்ட அணி 04 ஓட்டங்களி னால் வெற்றி பெற்றது.

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் கணக் காளர்கள், பிரதேச செயலாளர் கள், உதவித் திட்டமிடல் பணிப் பாளர்களைக் கொண்ட அணிகளாக இருந்ததுடன், பெண்களையும் அணியில் உள்வாங்கி இந்தப் போட்டி நடைபெற்றது.

# ஐ.சி.சியின் விருது குறும்பட்டியல் அறிவிப்பு

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இவ்வாண்டுக்கான விருதுகளுக்கான குறும்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப் பட்டுள்ள விருதுகளுக்கான குறும் பட்டியலில் இலங்கையின் குமார் சங்கக்கார சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர் ஆகிய வற்றிற்கான விருதுகளுக் குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அவர் தவிர திலகரட்ண டில்ஷான், அஜந்த மெண்டிஸ் ஆகியோர் ருவெண்ரி-20 விருதுகளுக்காகவும், சிறந்த புதுமுக வீரருக்கான விருதுக்கு டினேஷ் சந்திமாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

விருது வழங்கல் நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் 15ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

**இவ்வாண்டுக்கான சிறந்த வீரர்**

குமார் சங்கக்கார (இலங்கை), ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), மைக்கல் கிளார்க் (அவுஸ்திரேலியா), வேர்ணன் ஃபிலாந்தர் (தென்னாபிரிக்கா).

**சிறந்த டெஸ்ட் வீரர்**

குமார் சங்கக்கார (இலங்கை), ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), மைக்கல் கிளார்க் (அவுஸ்திரேலியா), வேர்ணன் ஃபிலாந்தர் (தென்னாபிரிக்கா).

**சிறந்த ஒருநாள் போட்டி வீரர்**

குமார் சங்கக்கார (இலங்கை), லசித் மலிங்க (இலங்கை), மகேந்திரசிங் டோணி (இந்தியா), விராத் கோலி (இந்தியா).

**ஒருநாள் சிறந்த வீராங்கனை**

லிடியா கிறீன்வே (இங்கிலாந்து), அனிஸா மொஹமட் (மேற்கிந்தியத் தீவுகள்), சாரா ரெய்லர் (இங்கிலாந்து) ஸ்ரஃபானி ரெய்லர் (மேற்கிந்தியத் தீவுகள்).

**சிறந்த புதுமுக வீரர்**

டினேஷ் சந்திமால் (இலங்கை), டக் பிரேஸ்வெல் (நியூசிலாந்து), சுனில் நரைன் (மேற்கிந்தியத் தீவுகள்), ஜேம்ஸ் பற்றின்சன் (அவுஸ்திரேலியா),

**துணை அங்கத்துவ நாடுகளில் சிறந்த வீரர்**

கெவின் ஓ பிரையன் (அயர்லாந்து), ஜோர்ஜ் டொக்ரெல் (அயர்லாந்து), எட் ஜொய்ஸ் (அயர்லாந்து), போல் ஸ்ரேர்லிங் (அயர்லாந்து), டாவ்லட்ஷட்ரன் (ஆப்கானிஸ்தான்).

**சிறந்த ருவெண்ரி-20 பெறுபேறு**

அஜந்த மெண்டிஸ் (இலங்கை), - 4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்கள் - எதிர் அவுஸ்திரேலியா, திலகரட்ண டில்ஷான் (இலங்கை) - 57 பந்துகளில் ஆட்டமிழக்காத 104 - எதிர் அவுஸ்திரேலியா, கிறிஸ் கெயில் (மேற்கிந்தியத் தீவுகள்) - 52 பந்துகளில் ஆட்டமிழக்காத 85 - எதிர் நியூசிலாந்து ரிச்சாட் லெவி (தென்னாபிரிக்கா) - 51 பந்து களில் ஆட்டமிழக்காத 117 -எதிர் நியூசிலாந்து.

**சிறந்த ருவெண்ரி-20 வீராங்கனை**

அலிஸா ஹீலி (அவுஸ்திரேலியா), லீசா ஸ்தலேக்கர் (அவுஸ்திரேலியா), சாரா ரெய்லர் (இங்கிலாந்து), ஸ்ரஃபானி ரெய்லர் (மேற்கிந்தியத் தீவுகள்).

**சிறந்த நடுவர்**

பில்லி பௌடன், அலீம் தார், குமார் தர்மசேன, ரிச்சாட் கெற்றல்புரோ, சைமன் தௌஃபல், ரொட்னி ரக்கர்.

**சிறந்த விளையாட்டு உணர்வுடன் விளையாடியமைக்கான விருது**

மொஹமட் ஹபீஸ் (பாகிஸ்தான்), ஜக்ஸ் கலிஸ் (தென்னாபிரிக்கா), டானியல் விற்றோரி (நியூசிலாந்து), ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா).

**மக்கள் தெரிவுக்கான விருது**

(எண்ணிக்கை குறைக்கப்படவில்லை) குமார் சங்கக்கார (இலங்கை), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து), ஜக்ஸ் கலிஸ் (தென்னாபிரிக்கா), வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா).

# ஆசிய வலைப்பந்தாட்டம் சிங்கப்பூர் சம்பியன்

8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இலங்கை அணியை தோற் கடித்து சிங்கப்பூர் அணி சம்பிய னாகியுள்ளது.

கொழும்பு சுகதாஸ உள்ளக அரங்கில் இன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை, சிங்கப்பூர் அணிகள் மோதின. இப்போட்டியில் 48-47 புள்ளிகள் விகிதத்தில் சிங்கப்பூர் அணி வெற்றி பெற்றது.

இலங்கையின் சார்பில் 47 புள்ளிகளையும் அணித்தலைவி தர்சினி சிவலிங்கம் பெற்றார்.

ஆனால் கடைசி பகுதியில் முக்கியமான ஒரு தருணத்தில் பந்தை கைப் பற்ற அவர் தவறிய நிலையில் புள்ளிகளை சமப்படுத்தும் வாய்ப்பை இலங்கை அணி இழந்தது.

கடந்த போட்டியில் இலங்கை அணி சம்பியன் வென்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஹொங்கொங் அணியை மலேசிய அணி 56-27 புள்ளிகள் விகிதத்தில் வென்றது.

# மாமா மருமகனிடம் "அவுட்"டான சச்சின்



சர்வதேச கிரிக்கெட்டில் 23 ஆண்டுகளாக பங்கேற்று வரும் சச்சின் சாதனைகள் பலவற்றை தனதாக்கியுள்ளார். இந்நிலையில் மாமா - மருமகனால் அவுட் ஆக்கப்பட்ட ஒரே வீரர் என்ற வித்தியாசமான அனுபவத்தை அவர் பெற்றுள்ளார்.

பெங்களூர் டெஸ்டில் டக்ளஸ் பிரேஸ்வெல் பந்தில் சச்சின் அவுட் ஆனார். இவர் நியூசிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஜானின் சகோதரியின் மகன் ஆவார். 1990-ம் ஆண்டில் நியூசிலாந்து அணியில் ஜான் இருந்தார். அப்போது கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற்ற டெஸ்டில் சச்சினை, ஜான் அவுட் ஆக்கினார். இப்போது சுமார் 22 ஆண்டுகளுக்குப் பின் அவரது மருமகனும் நியூசிலாந்து அணியில் பங்கேற்று சச்சினுக்குப் பந்து வீசி அவரை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

1989-ம் ஆண்டில் சர்வதேச டெஸ்ட் போட்டியில் முதல்முறையாக பங்கேற்ற சச்சின், 23 ஆண்டுகளைக் கடந்து இப்போது வரை தொடர்ந்து விளையாடி வருவதே இதுபோன்ற ஆச்சரிய மூட்டும் நிகழ்வுகளுக்கு காரணம்.

# டெக்கான் சார்ஜஸுக்கு உரிமையாளரைத் தேடுகிறது பி.சி.சி.ஐ

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றும் அணியான டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கான புதிய உரிமையாளர்களைத் தேடும் பணியில் இந்தியக் கிரிக்கெட் சபை ஈடுபட்டுள்ளது. டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் உரிமையாளர்களின் நிதிச்சிக்கல் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது.

டெக்கான் சார்ஜர்ஸ் அணியை உரிமையாகக் கொண்டுள்ள டெககான் குரோனிக்கல் நிறுவனம் குறித்த அணியின் பங்குகளை விற்பனை செய்யவுள்ளதாக அறிவித்திருந்தது. சில முதலீட்டாளர்கள் அவற்றை வாங்குவதற்கு முன்வந்த போதிலும் டெக்கான் குரோனிக்கல்ஸ் நிறுவனத்தில் நிதித் தளம்பல் காரணமாக அந்த முடிவிலிருந்து பின்வாங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக அணியை வாங்குவதற்கு யாரும் இல்லாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் டெக்கான் குரோனிக்கல் நிறுவனத்தில் நிதிக் குறைபாடு காரணமாக அணியை வேறு யாரும் வாங்காது போனால் அடுத்த இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி. பங்குபற்ற முடியாது போகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் காரணமாக டெக்கான் சார்ஜர்ஸ் அணியை ஏலத்தில் விடும் எண்ணத்தில் இந்தியக் கிரிக்கெட் சபை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய நிறுவனங்களை இந்தியக் கிரிக்கெட் சபை தேடி வருகிறது. அவ்வாறு புதிய நிறுவனமொன்று டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வாங்குவதற்கு முடிவு செய்யுமானாலே அடுத்த தொட ரில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி பங்குபற்றுவதற்கான வாய்ப்புக் கள் உள்ளதாக இந்தியக் கிரிக கெட் சபையின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2008ஆம் ஆண்டு முதலாவது இந்தியன் பிறீமியர் லீக் தொட ருக்கு முன்னதாக டெக்கான் குரோனிக்கல் நிறுவனம் 107 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு இவ்வணியை வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து வெற்றி தரவரிசையில் மீண்டும் முதலிடத்தில்



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 3ஆவது போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டியில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 46.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சிறந்த ஆரம்பமாக 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட போதிலும், ஒரு கட்டத்தில் 2 விக்கெட்டுக்களை இழந்து 120 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும் மத்தியவரிசை வீரர்கள் போதுமானளவு ஓட்டங்களைப் பெறாது போக தென்னாபிரிக்க அணி விரைவாக ஆட்டமிழந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 43 ஓட்டங்களையும், டீன் எல்கர் 42 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி 33 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் 28 ஓட்டங்களையும், ரொபின் பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஜேட் டேர்ண்பக் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் ட்ரெட்வெல் 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரவி போப்பாரா 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

212 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 48 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது விக்கெட்டை 14 ஓட்டங்களுக்கே அவ்வணி இழந்த போதிலும், தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய வீரர்களான ஒய்ன் மோர்கன், ஜொனதன் ட்ரொட் ஆகியோர் சிறப்பாக ஆடி இங்கிலாந்தின் வெற்றியை உறுதி செய்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஒய்ன் மோர்கல் 67 பந்துகளில் 73 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 125 பந்துகளில் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ரொபின் பீற்றர்சன் 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், டேல் ஸ்ரெய்ன், மோர்னி மோர்க்கல், வெய்ன் பார்னெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஒய்ன் மோர்கன் தெரிவானார்.

இந்த வெற்றியை அடுத்து 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 3 போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் 1-1 என்ற சமநிலையில் காணப்படுவதோடு, இங்கிலாந்து அணி இதற்கு முன்னைய போட்டியில் இழந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி முதலிடத்தையும் மீளப்பெற்றுள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 03.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது